ஸ்ரீ:

ஸ்ரீ க்ருஷ்ணாய நம:

ஏகாதச த்வாதச ஸ்கந்தங்கள்

தமிழ் வசனம்

இவை

ஸ்ரீ - அ. வீ. நரஸிம்ஹாசாரியரால்

இயற்றப்பெற்று

Dr. U. V. S. IYER LIBRARY
22484
MADRAS

சென்னை

ஆர். வெங்கடேஶ்வர் அண்டு கம்பெனியாரவர்களால்

ஆநந்த அச்சுக்கூடத்தில் அச்சிட்டு
வெளியிடப்பட்டன.

1921

ALL RIGHTS RESERVED.

ALL RIGHTS RESERVED

காபிரைட்:—1919௵ ஆர். வெங்கடேஸ்வர் அண்டு கம்பெனியாரவர்கள் காபிரைட்டுக்குரியவர்கள். இப்புத்தகம் இந்தியன் காபிரைட் ப்ரகாரமாகவும், அன்ய தேசியரது காபிரைட் ப்ரகாரமாகவும் காக்கப்பட்டிருக்கின்றது. எவராயினும் இப்புத்தகத்தை முழுவதுமாவது, அல்லது இதில் ஒரு பாகத்தையாவது தாம் வேறாக அச்சிடவும், மற்றொரு பாஷையில் மொழிபெயர்த்து அச்சிடவும் அதிகாரமில்லை. இதிலுள்ள பதங்களையாவது, பாகங்களையாவது, படங்களையாவது காபி செய்வார்களாயின், அது காபிரைட்டை உல்லங்கனஞ் செய்ததே ஆகும்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90 22484

ஏகாதசஸ்கந்தத்தின் பொருளடக்கம்

நெம்பர்.		பக்கம்.
1	ப்ராஹ்மண சாபத்தினுல் யாதவகுலம் க்ஷீணித்த வ்ருத்தாந்தத்தைக் கூறுதல் ...	2869
2	நாரதமஹர்ஷி வஸுதேவனுக்குப் பாகவத தர்மங்களைக் கூறுதல் ...	2875
3	பகவானுடைய மாயையின் ஸ்வரூபத்தையும் அதைக் கடக்கும் வழியையும் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் பாகவதர் அனுஷ்டிக்க வேண்டிய கர்மஸ்வரூபத்தையும் கூறுதல் ...	2889
4	விதேஹ மன்னவன் பகவானுடைய அவதார வ்ருத்தாந்தங்களைப் பற்றி வினவுதலும் த்ரமிலன் அதற்கு மறுமொழி கூறுதலும் ...	2908
5	பகவானிடத்தில் பக்தியில்லாதவர்களின் கதி எத்தகையதென்றும் யுகங்கள்தோறும் பகவானை எவ்வண்ணம் ஆராதிக்கவேண்டுமென்றும் அரசன் வினவினதற்குச்சமஸன் மறுமொழி கூறுதல் ...	2916
6	ப்ரஹ்மாதிதேவதைகள் வந்து பரமபதத்திற்கு எழுந்தருளலாமென்று ஸ்ரீக்ருஷ்ணனுக்கு விண்ணப்பஞ் செய்ய உத்தவன் அவனைப்பிரிய முடியாமல் வருந்தி விண்ணப்பஞ் செய்தல் ...	2932
7	ஸ்ரீக்ருஷ்ணன் உத்தவனுக்கு ஆத்மஜ்ஞானம் ஸித்திப்பதற்காக அவதூதவ்ருத்தாந்தத்தில் சொன்ன குருக்களில் தான் முதலிய எட்டுப்பேர்களைக் கூறுதல் ...	2947

நம்பர்.		பக்கம்.
8	ப்ராஹ்மணன் அஜகரம் முதலிய ஒன்பது வஸ்துக்களி னிடத்தினின்று தெரிந்து கொண்ட விஷயங்களை யதுவுக்குக் கூறுதல் ...	2968
9	ப்ராஹ்மணன் அழுகுரல் பக்ஷி முதலிய மற்றவைகளிடத்தினின்று தெரிந்து கொண்ட விஷயங்களை யதுவுக்குச் சொல்லுதல் ...	2979
10	ஸ்ரீக்ருஷ்ணன் ஆத்மாவுக்குத் தேஹ ஸம்பந்தாதி ரூபமான ஸம்ஸாரம் இயற்கையில் ஏற்பட்டதன்றென்று உத்தவனுக்கு உபதேசித்தல் ...	2990
11	பத்தர் முக்தர் ஸாதுக்கள் இவர்களின் லக்ஷணத்தையும் பக்தியின் ஸ்வரூபத்தையும் பகவான் உத்தவனுக்குக் கூறுதல் ...	3007
12	ந்யாஸமென்னும் ப்ரபத்தி வித்யையை உபதேசித்தல் ...	3024
13	ஸத்வகுணம் தலையெடுக்கில் ஜ்ஞானம் உண்டாகு மென்பதையும், ஸத்வாதி குணங்கள் கழியும் விதத்தையும் கூறுதல் ...	3032
14	பக்தியோகத்தின் சீர்மையையும், த்யானத்தின் ஸ்வரூபத்தையும், அதன் ஸாதனங்களையும் கூறுதல் ...	3053
15	பக்தியோகஞ் செய்யும் யோகிக்கு பகவத்ப்ராப்தி விரோதிகளான அணிமாதி ஸித்திகள் ஸித்திக்கும் விதத்தைக் கூறுதல் ...	3065
16	விபூதி யோகத்தை கூறுதல் ...	3074
17	வர்ணாஶ்ரம தர்மங்களை விவரித்துக் கூறுதல்.	3083
18	வானப்ரஸ்தாஶ்ரம தர்மங்களையும் ஸந்ந்யாஸாஶ்ரம தர்மங்களையும் கூறுதல் ...	3097

DR. U.V.S. ... LIBRARY
BESANT NAGAR, MADRAS-90 2.2484

நெம்பர்.		பக்கம்.
19	பக்தியோகத்தை அனுஷ்டிக்க முடியாதவனுக்குந்யாஸமென்றும் ப்ரபத்தியென்றும் வழங்கிவரும் உபாயத்தை உபதேசிக்கை...	3109
20	ஜ்ஞானயோகம் கர்மயோகம் பக்தியோகம் இவைகளையும் இவற்றின் அதிகாரிகளையும் நிரூபித்தல் ...	3122
21	கர்மஜ்ஞான பக்திகளில் அதிகாரமில்லாத ஸம்ஸாரிகளுக்கு த்ரவ்யதேசாதி குணதோஷங்களை நிரூபித்தல் ...	3133
22	தத்வ ஸங்க்யைகளின் விரோத பரிஹாரமும் ப்ரக்ருதி புருஷர்களின் விசாரமும், ஜன்ம மரணாதி ஸ்வரூப நிரூபணமும் ...	3150
23	மனத்தை அடக்குவதற்கு உபாயஞ் சொல்ல முயன்று அதற்கு நிதர்சனமாகப் பிக்ஷு கீதத்தை கூறுதல் ...	3172
24	ஸ்ருஷ்டி ஸம்ஹார க்ரமங்களை நிரூபித்தல் ...	3195
25	ஸத்வாதி குணவ்ருத்திகளையும் குணயுக்த வஸ்துக்களையும் குணாதீத வஸ்துக்களையும் நிரூபித்தல் ...	3203
26	துஷ்ட ஸஹவாஸத்தினால் யோக நிஷ்டைக்கு விக்னம் வருமென்றும் சிஷ்ட ஸஹவாஸத்தினால் அந்த யோகநிஷ்டை வளர்ந்து வருமென்றும் நிரூபித்துக்கொண்டு ஸங்கத்தினால் யோகப்ரஷ்டனாவானென்பதற்கு உதாஹரணமாக ஐலவ்ருத்தாந்தத்தைக் கூறுதல் ...	3215
27	உத்தவர் கர்மயோகத்தைப்பற்றி வினவுதலும் ஸ்ரீக்ருஷ்ணபகவான் அதை நிரூபித்துச் சொல்லுதலும் ...	3225

நெம்பர். பக்கம்

28 முன்பு விஸ்தரித்துச் சொன்ன ஜ்ஞானயோகத்தைச் சுருக்கிக் கூறுதல் ... 3238

29 பகவான் உத்தவருக்கு மீளவும் பக்தியோகத்தைக் காட்டிலும் ஸுகரமான உபாயத்தை உபதேசித்தல் ... 3258

30 ஸ்ரீக்ருஷ்ணன் மௌஸல வியாஜத்தினுல் தன் குலத்தை ஸம்ஹரித்தல் ... 3270

31 ஸ்ரீக்ருஷ்ண நிர்யாணமும், வஸுதேவாதிகள் பரலோகம் போதலும் ... 3279

த்வாதசஸ்கந்தத்தின்
பொருளடக்கம்.

32 மேல் வரப்போகிற ஸோமவம்ச பரம்பரையைக் கூறுதல் ... 3285

33 ஸ்ரீசுகர் பரீக்ஷித்து மன்னவனுக்குக் கலியுக ப்ராதுர்ப்பாவத்தின் அடையாளங்களைக் கூறுதல் ... 3291

34 பூமிகீதங்களால் ராஜ்யதோஷாதிகளையும், தோஷ பூயிஷ்டமான கலியில் தோஷங்களைப் போக்குவது ஸ்ரீஹரி நமஸ்காரமே யென்பதையும் கூறுதல் ... 3303

35 நைமித்திகம் முதலிய நான்குவகை ப்ரளயங்களை நிரூபித்தல் ... 3316

36 ஸ்ரீசுகர் பரீக்ஷித்துக்கு மீளவும் சுருக்கமாக ப்ரஹ்ம ஸ்வரூபத்தை உபதேசித்துத் தக்ஷக ஸர்ப்பம் கடிப்பதனால் நேரும் மரண பயத்தைப் போக்குதல் ... 3329

37 பரீக்ஷித்து மோக்ஷம் அடைதலும், ஜனமேஜயன் ஸர்ப்பயாகஞ் செய்தலும், வேதங்களின் சாகைகளை நிரூபித்துக் கூறுதலும் ... 3334

38 அதர்வ வேதத்தின் விபாகத்தைக் கூறுதல்... 3351

39 மார்க்கண்டேயர் தவஞ் செய்தலும், அவர் காமாதிகளால் மயங்காதிருத்தலும், நரநாராயணர்களை ஸ்தோத்ரஞ் செய்தலும் ... 3356

40 மார்க்கண்டேயர் பகவானுடைய மாயையைக் காண வேண்டுமென்று விரும்ப அவ்விருப்பத்தைப் பகவான் நிறைவேற்றுதல் ... 3369

41 ருத்ரன் மார்க்கண்டேயருக்கு வரங் கொடுத்தல் ... 3375

42 மஹா புருஷனுடைய அங்கோபாங்கங்களான அஸ்த்ர பூஷணாதிகளை நிரூபித்தலும், த்வாதசாதித்ய வ்யூஹவர்ணனமும் ... 3385

43. இப்புராணத்தில் சொன்ன விஷயங்களின் சுருக்கமும், பாகவத மஹிமையும் முதலியவை. ... 3397

ஸ்ரீ க்ருஷ்ணாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீபாகவதம்.

ஏகாதசஸ்கந்தம்.

ப்ராஹ்மணசாபத்தினால் யாதவகுலம் க்ஷீணித்தவ்ருத்தாந்தத்தைக் கூறுதல.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ஸ்ரீக்ருஷ்ணன் பலராமனும் தானுமாகிப் பூதனாசகடயமளார்ஜுனாதிகளான ஆஸுரப்ரக்ருதிகளை வதித்து யாதவர்களால் சூழப்பட்டுக் குருபாண்டவாதிகளுக்கு விரைவில் முடிக்கவல்ல கலஹத்தை விளைவித்து அதர்மிஷ்டர்களையெல்லாம் ஒழித்து இங்ஙனம் பூமியின் பாரத்தை நீக்கினான். ஜகதீசனாகிய ஸ்ரீக்ருஷ்ணன் சத்ருக்களாகிய துர்யோதனாதிகளால் கபடத்தை உட்கொண்ட சூதாட்டம் அவமதி த்ரௌபதியின் தலைமயிரைப் பிடித்திழுக்கை முதலிய பல அபகாரங்கள் செய்து கோபமுறும்படி செய்யப்பட்ட பாண்டவர்களை நிமித்தமாகக் கொண்டு கௌரவர்பக்ஷத்திலும் பாண்டவர்பக்ஷத்திலும் ஸஹாயமாகச் சேர்ந்த மன்னவர்களை ஒருவரையொருவரால் அடித்து முடித்து இங்ஙனம் பூமியின் பாரத்தை நீக்கினான். இவ்வளவென்று அளவிட்டறிய முடியாத ஸ்வரூப ஸ்வபாவங்களையுடைய அப்பரமபுருஷன் தன் புஜங்களால் பாதுகாக்கப்பட்ட யாதவர்களைக் கொண்டு

பூமிக்குப் பாரமான ராஜர்களின் ஸைன்யங்களையும் ராஜர்களையும் மடித்து மீளவும் தனக்குள் அம் மஹானுபாவன், 'பூமியின் பாரத்தை இவ்வளவு நீக்கி யும் அது நீங்கவில்லையென்றே நினைக்கின்றேன். ஏனெ ன்றால், ஒருவராலும் பொறுக்க முடியாத யாதவகுலம் இன்னம் அப்படியே இருக்கின்றதல்லவா? இந்த யா தவ ஸைன்யத்திற்கு மற்றொருவனால் எவ்விதத்திலும் பரிபவம் உண்டாகாது. இனி இதை அழிக்கவல்லவன் எவனுமே இல்லை. ஏனென்றால், இந்த யாதவஸைன் யம் என்னையே பற்றியிருப்பது. என்னைப்பற்றினவர்க ளுக்கு ஒருகாலும் கெடுதி உண்டாகாதல்லவா? அந்த யாதவர்கள் என்னையே கதியாகப் பற்றினமையால் வீர்ய ஸௌர்யாதிகள் அமைந்து பெருமையுடையவர்க ளாயிருக்கின்றார்கள். ஆகையால் இவர்கள் ஒருவரா லும் பரிபவிக்க முடியாதவர்கள். மூங்கில்புதரில் மூங் கில்கள் ஒன்றோடொன்று இழைத்துக்கொள்கையால் புதர் முழுவதும் அழிந்துபோகும்படி நெருப்பு உண்டா வதுபோல், இந்த யாதவகுலத்தில் தனக்குள் கல ஹத்தை உண்டாக்கி அதை முடித்துப் பூமியின் பாரத் தை முழுவதும் நீக்கி அவதார ப்ரயோஜனம் கைகூடப் பெற்றுப் பரிதாபம் முதலிய ஊர்மிகளின்றிச் சாந்த மான ஸ்ரீ வைகுண்டமென்கிற என் ஸ்தானத்திற்குப் போய்ச் சேருகிறேன்' என்று சிந்தித்தான். ஸத்ய ஸங் கல்பனும் ஸர்வேஶ்வரனுமாகிய அந்த ஸ்ரீ க்ருஷ்ணன் இங்ஙனம் தனக்குள் நிச்சயித்துக்கொண்டு ஸமர்த்த னாகையால் ப்ராஹ்மண சாபமென்னும் வ்யாஜத்தினால் தன்னுடையதான யாதவகுலத்தையெல்லாம் ஸம்ஹா ரஞ் செய்தான். அப்பகவான் அளவற்ற லாவண்யமு டைய தன் திவ்யமங்கள விக்ரஹத்தினால் உலகத்தி

லுள்ள லாவண்யத்தையெல்லாம் பறித்து (மூன்று லோகங்களிலுமுள்ள லாவண்யமெல்லாம் ஸமுத்ரத்தில் குளப்படிபோல் அப்பரமனுடைய திவ்யமங்கள விக்ரஹ லாவண்யத்தில் உள்ளடங்கினதாகையால் தன் திருமேனியைக் கண்டபின்பு எங்கும் லாவண்யமே இல்லையென்று தோன்றும்படி செய்து) தன் கடைக்கண்ணோக்கத்தினால் ப்ராணிகளின் கண்ணோக்கத்தையும் பறித்துத் தன் மொழிகளால் அவற்றை நினைக்கும் ப்ராணிகளின் மனத்தையும் பறித்து, ஆங்காங்கு அடையாளஞ் செய்யப்பட்ட தன் அடிவைப்புக்களால் அவற்றைக் காண்கிற ப்ராணிகளின் மற்றோரிடம் போகை முதலிய செயல்களையும் பறித்து (இங்ஙனம் அப்பொழுதுள்ளவர்களின் கண் முதலிய இந்த்ரிய வ்யாபாரங்களை யெல்லாம் தன்னிடத்திலேயே நிலைநின்றிருக்கும்படி செய்து) மேல் பிறக்கப்போகிறவர்கள் ஸம்ஸாரத்தைக் கடந்து கரையேறும்பொருட்டுப் பூமியில் நன்கு பாடத்தகுந்த தன் புகழைப் பரப்பி இதனால் அஜ்ஞானகார்யமான ஸம்ஸாரத்தை அனைவரும் கடப்பார்களென்று நினைத்துத் தன்னிடம் போய்ச் சேர்ந்தான்.

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான் :—யாதவர்கள் ப்ராஹ்மணர்களிடத்தில் மிகுந்த விஸ்வாஸமுற்று அவர்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் ப்ரீதியுடன் நிறைவேற்றிக் கொடுக்குந் தன்மையர்; தானசீலர்களில் சிறப்புடையவர்; என்றும் தவறாமல் பெரியோர்களைப் பணியும் ஸ்வபாவமுடையவர்கள்; மற்றும், ஸ்ரீக்ருஷ்ணனிடத்திலேயே நிலைநின்ற மனமுடையவர்கள். இத்தகையரான யாதவர்களுக்கு ப்ராஹ்மணசாபம் எப்படி உண்டாயிற்று? ப்ராஹ்மணஸ்ரேஷ்டரே! (எப்படியேனும் உண்டாயிருக்குமாயினும்,) அது எங்

தக் காரணத்தைப்பற்றி உண்டாயிற்றோ அதையும், அது எத்தகையதோ அதையும், ஒருவரோடொருவர் ஒத்த மதியுடைய அந்த வ்ருஷ்ணிகளுக்குத் தங்களுக்குள் கலஹம் எப்படி உண்டாயிற்றோ அதையும், பரப்ரஹ்மோபாஸனத்தினால் எல்லாவற்றையும் ஸமமாகப் பார்க்கும் தன்மையரான ரிஷிகளுக்கு யாதவர்களைச் சபிக்கும்படியான பேதபுத்தி எப்படி உண்டாயிற்றோ அதையும் ஆகிய இவையெல்லாவற்றையும் எனக்கு விவரித்துச் சொல்வீராக.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—அழகெல்லாம் அமைந்து மிகவும் மங்களமான திவ்யமங்கள விக்ரஹத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீ க்ருஷ்ணபகவான் தேவதைகளுக்கும் மனுஷ்யர்களுக்கும் செய்யமுடியாத மங்களமான செயல்களை நடத்திக்கொண்டு த்வாரகையில் இருந்து விளையாடலுற்றுப் பெரும் புகழுடையவனாகிப் பூமியின் பாரத்தை நீக்குகையாகிற தன் கார்யம் சிறிது குறையாயிருக்கப்பெற்றுத் தன்னுடையதான யாதவகுலத்தை அழிக்க நினைத்தான். புண்யங்களை விளைப்பவைகளும் பாடுகிற ஜனங்களுக்குக் கலியுகத்தினால் நேரும் பாபங்களைப் போக்குபவைகளும் மிக்க மங்களங்களுமான செயல்களைச் செய்துகொண்டு வஸுதேவனுடைய க்ருஹத்தில் வாஸஞ் செய்பவனும் காலத்தைச் சரீரமாகக்கொண்டு லோக ஸம்ஹாரஞ் செய்பவனுமாகிய அப்பரமபுருஷன், முனிவர்களைத் தன் ஸங்கல்பத்தினால் தூண்ட, விஶ்வாமித்ரர், அஸிதர், கண்வர், துர்வாஸஸ்ஸு, ப்ருகு, அங்கிரஸ்ஸு, கஶ்யபர், வாமதேவர், அத்ரி, வஸிஷ்டர், நாரதர் முதலிய அம்முனிவர்கள் த்வாரகைக்கு அருகாமையிலுள்ள பிண்டாரகமென்னும் புண்ய தீர்த்தத்திற்கு வந்தார்கள். அந்தப்

புண்ய தீர்த்தத்தில் விளையாடிக்கொண்டிருக்கிற யாதவ குமாரர்கள் அம்முனிவர்களிடஞ் சென்று பாதவந்தனஞ் செய்து தாங்கள் விநயமற்றவராயினும் விநயமுடையவர்கள்போல் நடனஞ் செய்துகொண்டு ஜாம்பவதியின் பிள்ளையாகிய ஸாம்பனுக்குக் கர்ப்பமுடைய பெண்ணின் வேஷம்போட்டு அம்முனிவர்களிடம் கொண்டுபோய் நிறுத்தி 'ஓ அந்தணர்களே! கர்ப்பிணியும் ப்ரஸவகாலம் ஸமீபிக்கப் பெற்றவளும் புதல்வன் பிறக்க வேண்டுமென்று விரும்புகின்றவளுமாகிய இக் கருங்கண்ணி தான் நேரில் கேட்க வெட்கமுற்று எங்களைக் கொண்டு கேட்கின்றாள். இவள் பிள்ளையைப் பெறுவாளா? பெண்ணைப் பெறுவாளா? எங்கும் தவறாத நெஞ்சென்னும் உட்கண்ணுடையவர்களே! இதை இவளுக்குச் சொல்வீர்களாக' என்று வினவினார்கள். மன்னவனே! இங்ஙனம் வஞ்சிக்கப்பட்ட அம்முனிவர்கள் கோபமுற்று 'மந்தபுத்தியர்களே! இவள் உங்கள் குலத்தையெல்லாம் பாழ் செய்வதான உலக்கையைப் பெறப் போகிறாள்' என்று மொழிந்தார்கள். அந்த யாதவ குமாரர்களும் அதைக் கேட்டு மிகவும் பயந்து சீக்ரமாக ஸாம்பனுடைய அரைத்துணியை அவிழ்த்து அவனுதரத்தில் இரும்புமயமான உலக்கையைக் கண்டு, 'ஆ! மந்தபாக்யர்களாகிய நாம் என்ன செய்தோம்! நம்முடையவர்கள் நம்மை என்ன சொல்வார்கள்!' என்று தமக்குள் மனவருத்தமுற்று அவ்வுலக்கையை எடுத்துக்கொண்டு க்ருஹத்திற்குச் சென்றார்கள். அனந்தரம் அக்குமாரர்கள் அவ்வுலக்கையை ராஜஸபையில் கொண்டுபோய் முகவொளி மழுங்கப்பெற்று ஸமஸ்த யாதவர்களும் சேர்ந்திருக்கையில் ராஜனாகிய உக்ரஸேனனுக்குத் தாங்கள் செய்ததை யெல்லாம் விண்ணப்

பஞ் செய்தார்கள். மன்னவனே! த்வாரகையிலுள்ள வர்கள் அனைவரும் வீணுகாததான விப்ரசாபத்தைக் கேட்டு உலக்கையையும் கண்டு முதலில் வியப்புற்று உடனே மிகுதியும் பயந்து பயத்தினுல் உடம்பெல் லாம் நடுங்கப்பெற்றுர்கள். யாதவர்களுக்கு ராஜனு கிய அவ்வுக்ரஸேனன் அவ்வுலக்கையைச் சூர்ணஞ் செய்வித்து அந்தச் சூர்ணத்தையும் அதில் மிகுந்த இருப்புத் துணுக்கைகளையும் ஸமுத்ரஜலத்தில் கொ ண்டுபோய்ப் போடுவித்தான். அந்த ஸமுத்ர ஜலத் தில் ஒரு மத்ஸ்யம் அவ்விருப்புத்துணுக்கையை விழுங்கிற்று. இருப்புச்சூர்ணங்களோ வென்றுல் ஸமுத்ர ஜலத்தின் அலைகளால் ஆங்காங்குக் கரை யோரங்களில் தள்ளுண்டு நின்று, நீண்டு பருத்து மூன்று நுனியுடையவைகளுமாகிய கோரைகளாய் முளைத்தன. இருப்புத் துணுக்கையை விழுங்கின மத் ஸ்யம் மற்றும் சில மத்ஸ்யங்களோடு செம்படவர்களால் வலையில் பிடியுண்டது. அதைப் பிடித்த செம்படவன் அம்மத்ஸ்யத்தின் உதரத்திலிருந்த இருப்புத் துணுக் கையைப் பாணத்தின் நுனியில் வைத்தான். வருங் காலம் நிகழ்காலம் கழிகாலம் ஆகிய மூன்று காலங்களி லுமுள்ள விஷயங்களை யெல்லாம் அறிந்த மஹானுபா வனுகிய ஸ்ரீக்ருஷ்ணன் அந்த ப்ராஹ்மணசாபத்தை வீணுக்கவல்லவனுயினும் அங்ஙனம் நினைக்கவில்லை. அவன் காலரூபியாய்க்கொண்டு ஸம்ஹரிக்க நினைத்தி ருப்பவனுகையால் அதை அங்ஙனமே நடக்கும்படி அனு மோதனஞ் செய்தான். ஒன்றுவது அத்யாயம் முற் றிற்று.

நாரதமஹர்ஷி வஸுதேவனுக்குப் பாகவத தர்மங்களைக் கூறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—கௌரவகுலத்தை மேன்மைப்படுத்தும் தன்மையனே! நாரதமஹர்ஷி ஸ்ரீக்ருஷ்ணனைப் பணிவதில் பேராவலுடையவராகி அந்த ஸ்ரீ க்ருஷ்ணனுடைய புஜங்களால் பாதுகாக்கப்பட்ட த்வாரகாபுரியில் நிரந்தரமாக வாஸஞ் செய்துகொண்டிருந்தார். (ஜ்ஞானுதிகாரான அத் தேவர்ஷி பரமாத்ம ஸாக்ஷாத்காரமுடையவராகையால் அவருக்கு ஸ்ரீக்ருஷ்ணனைப் பணிவதில் அத்தகைய பேராவல் உண்டாயிருக்க வேண்டிய அவஸ்யம் என்னென்று சங்கிக்கவேண்டாம்). ராஜனே! கண்களைப் படைத்தவன் எவன்தான் தன்னைப் பணிகிற ஸகல ஜனங்களின் ம்ருத்யுவையும் போக்கவல்லவைகளும் ஜ்ஞானுதிகர்களான ப்ரஹ்மருத்ராதி தேவஸ்ரேஷ்டர்களால் பணியப் பெற்றவைகளுமாகிய ஸ்ரீக்ருஷ்ணனுடைய பாதாரவிந்தங்களைப் பணியாதிருப்பான்? வஸுதேவன் ஒருகால் தேவர்ஷியாகிய நாரதர் தன் க்ருஹத்திற்கு வர அவரைப் பூஜித்து ஸுகமாக உட்கார்ந்திருக்கின்ற அம்முனிவரை நமஸ்கரித்து இங்ஙனம் மொழிந்தான்.

வஸுதேவன் சொல்லுகிறான்:—மஹானுபாவரே! நீர் மூன்று லோகங்களையும் ஸஞ்சரித்துக் கொண்டிருப்பது என்னைப் போன்ற ஸமஸ்த ப்ராணிகளின் க்ஷேமத்திற்காகவேயன்றி வேறு காரணத்திற்காகவன்று. உத்தமஸ்லோகனை பகவானுடைய ஸ்வரூப ஸ்வபாவாதிகளை அறிவிக்கும் த்வாரமாயிருப்பவர்களான உம்மைப்போன்ற பெரியோர்களின் யாத்ரை ஸம்ஸார தாபங்களால் பீடிக்கப்பட்ட ப்ராணிகளின் க்ஷேமத்திற்காகவே யல்லவா? தாய்தந்தைகள் வருவது பிள்ளை

களின் ஸுகத்திற்காக வல்லவா? (எங்களுடைய யாத்ரையை விசேஷித்துப் புகழ்கின்றனையே. தேவாதிகளுடைய யாத்ராதிகார்யங்களும் கர்மலோகங்களின் க்ஷேமத்திற்காகவே யல்லவா. அவற்றை விட்டு இதைப் புகழ்வதேனோ? என்றால்) பர்ஜன்யன் முதலிய தேவதைகளின் நடத்தை ப்ராணிகளின் துக்கத்திற்கும் ஸுகத்திற்கும் பொதுவாயிருக்கின்றது. (ஒருகால் துக்கத்தையும் ஒருகால் ஸுகத்தையும் கொடுக்கும். அச்சுதனிடத்தில் நிலைநின்ற மனமுடைய உம்மைப்போன்ற ஸாதுக்களின் நடத்தையோ வென்றால் எப்பொழுதும் ஸுகத்தையே கொடுக்கும். தேவதைகளை எவர்கள் எப்படி பணிகின்றார்களோ, அவர்களை அத்தேவதைகள் அப்படியே அநுஸரிப்பார்கள். ஏனென்றால், அந்தத் தேவதைகள் நிழலைப் போன்று ப்ராணிகளின் பணிதலுடைய தாரதம்யத்தை அநுஸரித்துப் பலன் கொடுப்பார்கள். ஸாதுக்களோ வென்றால் ஸம்ஸாரதாபங்களால் வருந்தின ஸமஸ்த ப்ராணிகளிடத்திலும் அவர்களுடைய துக்கங்களையெல்லாம் போக்கவேண்டுமென்னும் விருப்பமுடையவர்கள். ப்ரஹ்மர்ஷியே! இங்ஙனம் வஸ்துஸ்திதி இருக்கையால் உம்முடைய வரவு மாத்ரத்தினாலேயே நாங்கள் க்ருதார்த்தர்களானோம். (ப்ரயோஜனங்களெல்லாம் கைகூடப் பெற்றோம்). நீர் எந்த தர்மங்களை அநுஷ்டித்ததனால் பகவான் உம்மிடத்தில் அருள்புரிந்தானோ, அத்தகைய பாகவத தர்மங்களை அறிய விரும்புகிறேன். இந்தப் பாகவத தர்மங்களைக் கேட்பானாயின், அவன் ஸர்வவிதமான ஸம்ஸாரபயத்தினின்றும் விடுபடுவானல்லவா? (பரமபுருஷனைப் புதல்வனாகப் பெற்ற நீ மற்றொருவனைப்போல ஏன் இங்ஙனம் வருந்துகிறாய்? என்கி

ரீரோ, சொல்லுகிறேன். கேளும்.) நான் பகவானுடைய மாயையினால் மதிமயங்கிப் பிள்ளையைப் பெற வேண்டுமென்னும் விருப்பத்துடன் மோக்ஷங் கொடுக்க வல்லனாகிய அனந்தனை ஆராதித்தேனும். மோக்ஷத்திற்காக ஆராதிக்கவில்லை. (அதனால் நான் பகவானைப் புதல்வனாகப் பெற்றேனன்றி வேறில்லை. நான் மோக்ஷத்திற்காக ஆராதனஞ் செய்யாமையைப் பற்றி வருந்துகிறேன்.) நல்லொழுக்க முடையவரே! ஆகையால், விசித்ரமான துக்கங்களை விளைப்பதாகிய ஸம்ஸார ஸாகரத்தினின்று நான் எப்படி ஸுகமாக விடுபடுவேனோ, அங்ஙனம் உண்மையாக நீர் என்னைக் கற்பிக்க வேண்டும்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ராஜனே! இங்ஙனம் மிகுந்த மதியுடைய வஸுதேவனால் வினவப் பெற்ற தேவர்ஷியாகிய நாரதர் தான் சொல்ல வேண்டியவைகளான பகவானுடைய குணங்களால் பகவானைப் பற்றி நினைவு மூட்டப்பெற்று மனக்களிப்புற்று அவ்வஸுதேவனைக் குறித்து மொழிந்தார்.

நாரதர் சொல்லுகிறார்:—ஸாத்வத ஶ்ரேஷ்டனே! நீ நன்றாக நிச்சயித்தனை. (இதுவே பரமார்த்தமென்னும் நிச்சயபுத்தியுடையவன் நீயே). ஏனென்றால் ஜகத்திற்கெல்லாம் க்ஷேமத்தை விளைப்பவைகளான பாகவத தர்மங்களை அறிய விரும்புகின்றனை யல்லவா? பாகவத தர்மம் கேட்கிலும் வாயால் சொல்லிலும் நெஞ்சால் நினைக்கிலும் ஆதரஞ் செய்யிலும் அதில் முயன்றவர்களை அனுமோதனஞ் செய்யிலும் தேவதைகளுக்கு த்ரோஹம் செய்தவர்களையும் ஸமஸ்த ப்ராணிகளுக்கு த்ரோஹம் செய்தவர்களையும் உடனே அது புனிதஞ் செய்யும். (நீ எனக்கு மஹோபகாரஞ் செய்தனை.

ஏனென்றால்) பகவானைக் காதால் கேட்கிலும் வாயால் சொல்லிலும் அவன் அவர்களுக்குப் புண்யத்தை விளைவிப்பான். அவன் மிகவும் மங்கள ஸ்வரூபன்; அமங்களங்களை யெல்லாம் போக்குந் தன்மையன்; ஷாட்குண்ய பூர்ணன்; கர்மத்தினால் விளையும் விகாரங்களின்றி என்றும் விளங்குந் தன்மையன். அத்தகையனான ஸ்ரீமந் நாராயணனை நீ இப்பொழுது எனக்கு நினைவு மூட்டினை. நீ கேட்ட இவ்விஷயத்தில் மஹானுபாவனாகிய விதேஹராஜனுக்கும் ருஷபகுமாரர்களுக்கும் நடந்த பழையதான ஸம்வாதத்தை உத்தரமாகச் சொல்லுகிறார்கள். (உன் கேள்வி விதேஹராஜனுடைய கேள்வியைப் போன்றதாகையால் அதற்கு என்ன உத்தரமோ அதுவே உன்கேள்விக்கும் உத்தரம்.) ஸ்வாயம்புவமனுவுக்கு ப்ரியவ்ரதனென்னும் புதல்வன் இருந்தான். அவன்பிள்ளை நாபி. அவன் பிள்ளை ருஷபன். மோக்ஷதர்மங்களைச் சொல்ல விரும்பி அவதரித்த வாஸுதேவாம்சமென்று அவனைச் சொல்லுகிறார்கள். அவனுக்கு நூறு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களெல்லோரும் வேதத்தையும் அதன் பொருளான ப்ரப்ரஹ்மத்தையும் உள்ளபடி அறிந்தவர்கள். (சிலர் வேதத்தின் கரை யறிந்தவர்கள். சிலர் வேதம் வேதத்தின் பொருளான பரப்ரஹ்மம் ஆகிய இரண்டின் கரையும் அறிந்தவர்கள்). அவர்களுக்குள் பரதனென்பவன் முதல்வன். அவன் ஸ்ரீமந்நாராயணனையே ப்ராப்யமும் ப்ராபகமுமாகப் பற்றினவன். அஜநாபவர்ஷமென்று வழங்கி வருகிற இவ்வர்ஷம் அந்தப் பரதனுடைய ஆட்சிக்குட்பட்டு அவன் பெயரால் பாரத வர்ஷமென்று அற்புதமாய் ப்ரஸித்தி பெற்றது. அப்பரதன் போகங்களெல்லாம் அனுபவிக்கப்பெற்றதும் தன் வசத்திலிருப்

பதுமாகிய இப்பூமண்டலத்தையெல்லாம் துறந்து க்ரு ஹத்தினின்றும் புறப்பட்டுத் தன் வர்ணாஶ்ரமங்களுக் குரிய தர்மங்களை அனுஷ்டித்துப் பரமபுருஷனை உபா ஸித்து மூன்று ஜன்மங்களால் அப்பரமபுருஷனுடைய பதவியைப் பெற்றான். அப்பரதன் தம்பிகளான மற்ற தொண்ணூற்றொன்பது பேர்களில் இலாவர்த்தன் முத லிய ஒன்பது பேர்கள் இப்பாரதவர்ஷத்தின் கண்டங் களான ஒன்பது த்வீபங்களுக்கு ப்ரபுக்களாயிருந்தார் கள். மற்றவர்களில் எண்பத்தோரு பேர்கள் த்விஜா திகளாய் கர்மதந்த்ரத்திற்கு ப்ரவர்த்தகர்களானார் கள். மற்ற ஒன்பது பேர்கள் ஜ்ஞானம் வைராக்யம் முதலிய பாக்யமுடையவர்களும் பரமார்த்தத்தை நிரு பிக்குந் திறமையுடையவர்களும் அத்யாத்மவித்யையில் நன்கு ஶ்ரமப்பட்டு அவ்வாத்மவித்யையில் ஸமர்த்தர் களும் திகம்பரர்களுமான முனிவர்களாயிருந்தார்கள். அவர்கள் கவி, ஹரி, அந்தரிக்ஷன், ப்ரபுத்தன், பிப்ப லாயனன், ஆவிர்ஹோத்ரன், த்ரமிலன், சமஸன், கர பாஜனன் என்னும் பெயருடையவர்கள். அத்தகையர் களான இவர்கள் பகவானுக்குச் சரீரமும் சேதனு சேதன ரூபமுமாகிய ஜகத்தை யெல்லாம் பரமாத்மா வைக்காட்டிலும் பேதப்படாததாகவே பார்த்துக்கொ ண்டு பூமண்டலம் முழுவதும் திரிந்தார்கள். அவர் கள் எங்கெங்குப் போகவேண்டுமென்று விரும்புகிறார் களோ, அங்கங்கெல்லாம் அவர்களுக்குத் கதி தடை படாதிருந்தது. அவர்கள் எங்கும் மனப்பற்றில்லாத வர்கள். அவர்கள் தேவர் ஸித்தர் ஸாத்யர் கந்தர்வர் யக்ஷர் மனுஷ்யர் கின்னரர் நாகர் இவர்களின் லோகங் களையும், முனிவர் சாரணர் பூதநாதர் வித்யாதரர் த்வி ஜர் கோக்கள் இவர்களின் ஸ்தானங்களையும் இஷ்டப்

படி சுற்றிக்கொண்டிருந்தார்கள். இங்ஙனம் ஆங்காங்குத் திரிந்துகொண்டிருக்கிற அந்தக் கவி முதயலிவர் ஒருக்கால் பாரதவர்ஷத்தில் ரிஷிகளால் அனுஷ்டிக்கப்படுகிற மஹானுபாவரான ஜனக மஹாராஜனுடைய ஸத்ரயாகத்திற்குத் தற்செயலாய்ப் போய்ச் சேர்ந்தார்கள். மன்னவனே! யஜமானனாகிய நிமிமஹாராஜன் ப்ராஹ்மணர்கள் உருவங்கொண்ட ஆஹவனீயம் முதலிய அக்னிகள் ஆகிய அனைவரும் ஸூர்யன்போல், திகழ்கின்ற மஹாபாகவதர்களான அந்த ருஷபகுமாரர்களைக் கண்டு எதிர்கொண்டார்கள். விதேஹ மன்னவன் அவர்கள் நாராயணபராயணர்களென்று அடையாளங்களால் அறிந்து ஸந்தோஷமுற்று அவர்களுக்கு ஆஸனம் அளித்து அதில் உட்கார்ந்திருக்கின்ற அம்மஹானுபாவர்களை உரியபடி பூஜித்தான். மிகவும் ஸந்தோஷமுற்றிருக்கிற அவ்விதேஹமன்னவன், தங்கள் தேஜஸ்ஸினால் ப்ரகாசிப்பவர்களும் ப்ரஹ்மபுத்ரர்களான ப்ருகு முதலியவர்கள்போன்றவர்களுமாகிய அம்மஹானுபாவர்களை வணக்கத்துடன் வினவினான்.

விதேஹமன்னவன் சொல்லுகிறான்:—நீங்கள் ஷாட்குண்யபூர்ணனாகிய பகவானுடைய பாரிஷதர்களென்று (பாரிஷதர்போன்றிருக்கையால் பாரிஷதர்களேயென்று) நினைக்கிறேன். விஷ்ணுபக்தர்கள் உலகங்களைப் புனிதஞ்செய்யும்பொருட்டு முழுவதும் திரிகின்றார்களல்லவா? (ஆகையால் விஷ்ணுபக்தர்களாகிய நீங்களும் உலகங்களைப் புனிதஞ்செய்யும்பொருட்டுத் திரிகின்றீர்கள்.) கர்மவசத்தினால் பற்பல சரீரங்களைப் பெறுகின்ற ஜீவாத்மாக்களுக்குப் பற்பல சரீரங்களுக்குள் மனுஷ்யசரீரம் கிடைப்பது அரிது. அது

வும் ஒரு க்ஷணத்தில் அழியுந்தன்மையது. மிகுந்த ஸு க்ருதத்தினால் கிடைக்கக்கூடியதாகையாலும் எல்லா விதத்திலும் பகவானை ஆராதிப்பதற்கு உபயோகப்படுவதாகையாலும் மனுஷ்யசரீரம் சிறப்புடையது. ஆகையால் அது பெரும்பாலும் துர்லபம். அங்ஙனம் துர்லபமான அம்மனுஷ்யஜன்மம் பெற்றாலும் ஸர்வேஶ்வரன் ப்ராப்யனென்று அவனைப் பெறுகைக்கு அனுரூபமாயிருக்கும் உபாயத்தைப் பரிக்ரஹிக்க வேண்டுமென்னும் ருசி ஒருவர்க்கும் பிறவாது. இது உண்டாகிலும் உண்டாம். பகவானுக்கு அன்பர்களான உங்களைப்போன்ற பெரியோர்களின் தர்சனம் கிடைப்பது மிகவும் துர்லபமென்று நான் நினைக்கின்றேன். இந்த ஸம்ஸாரத்தில் ப்ராணிகளுக்கு அரைக்ஷணகாலமாயினும் ஸத்புருஷர்களுடைய ஸஹவாஸம் நேருமாயின், அது நிதியைப்போல் புருஷார்த்தங்களை யெல்லாம் ஸாதித்துக்கொடுக்கும். கர்மத்தினால் விளையும் பிறவிமுதலிய விகாரங்களற்ற பகவான் எந்த தர்மங்களால் அருள்புரிந்து தன்னைச் சரணம் அடைந்தவனுக்குத் தன்னையும் கொடுப்பானோ, அப்படிப்பட்ட பாகவததர்மங்களை நாங்கள் கேட்கக்கூடுமாயின் அவற்றை எங்களுக்குச் சொல்வீர்களாக.

நாரதர் சொல்லுகிறார்:—வஸுதேவனே! இங்ஙனம் மஹானுபாவனாகிய நிமியால் வினவப்பட்ட அந்த ருஷபகுமாரர்கள் ஸதஸ்யர்களோடும் ருத்விக்குக்களோடும் கூடின அந்நிமி மன்னவனை ப்ரீதியுடன் பூஜித்து மொழிந்தார்கள்.

கவி சொல்லுகிறான்.—இங்குப் பிழைத்திருக்கும்பொழுது என்றும் தவறாமல் அச்சுதனுடைய பாதாரவிந்தங்களைப் பணிகையே எவ்விதத்திலும் பயமில்லாத

தென்று நினைக்கிறேன். (எல்லாவற்றிலும் சிறந்த நன்மை முக்தியே. அதைப் பெறுமுபாயம் பகவானுடைய பாதாரவிந்தங்களைப் பணிகையே. அதுவே பாகவத தர்மம்). ப்ரக்ருதியின் பரிணாமமாகையால் பொய்யென்று சொல்லத்தக்கதாகிய தேஹத்தில் ஆத்மாபிமானத்தினால் பயந்த மதியுடைய புருஷன் சேதனாசேதனரூபமான ஜகத்திற்கெல்லாம் அந்தராத்மாவான பரமபுருஷனைப் பணிவானாயின், அவனுக்கு எல்லாவிதத்திலும் பயம் நீங்கி மோக்ஷம் உண்டாகின்றது. பகவான், அறிவில்லாத புருஷர்கள் அனாயாஸமாகத் தன்னை அடையும்பொருட்டுப் பஞ்சராத்ரம்முதலியசாஸ்த்ரங்கள் மூலமாய் ஶ்ரவணம் கீர்த்தனம் ஸ்மரணம் பாதஸேவனம் அர்ச்சனம் முதலிய எந்த உபாயங்களைச் சொன்னானோ, அவையே பாகவததர்மங்களென்று அறிவாயாக. ராஜனே! இந்தப் பாகவததர்மங்களை நன்றாக அனுஷ்டிக்கிறவன் எவ்விதத்திலும் நல்லவழியினின்று நழுவமாட்டான். (உபாயாந்தரங்களை அனுஷ்டிப்பவர்களுக்குக் கெடுதி வருவதுபோல் பகவத்தர்மநிஷ்டர்களுக்கு எவ்விதக்கெடுதியும் உண்டாகாது). இந்தப்பாகவததர்மங்களில் கண்ணை மூடிக்கொண்டு ஓடுவானாயினும் அவன்நடை தடைபடாது; அவன் விழவுமாட்டான். (ஒருவன் நல்ல ராஜமார்க்கத்தில் கண்ணை மூடிக்கொண்டு ஓடுவானாயினும், அவனுக்குத் தடுக்காது. அவன் அதில் தவறி விழவும் மாட்டான். மற்ற உபாயங்களை அனுஷ்டிப்பவர்கள் சிறிது ஊக்கம் தவறினும் தடைபடுவார்கள்; அதினின்று விழவும் விழுவார்கள்). ஸம்ஸாரவாஸனாரூபமான ஸ்வபாவத்தைத் தொடர்ந்த ஜீவன், சரீரம் வாக்கு மனம் மற்ற ஜ்ஞானேந்த்ரிய கர்மேந்த்ரியங்கள் புத்தி மதி இவைக

ளால் என்னென்ன செய்கிறானோ, அவற்றையெல்லாம் ஸ்ரீமந்நாராயணனுக்கென்று அவன் திருவடிகளில் அர்ப்பணஞ் செய்யவேண்டும். ஆத்மா பரமாத்மாவுக்கு உட்படாமல் ஸ்வதந்த்ரனாயிருப்பவனென்னும் துரபிமானத்தினால் பயம் உண்டாகின்றது. இங்ஙனம் பகவானிடத்தில் விமுகனாயிருப்பவனுக்குத் தேஹாத்மப்ரமமும் அதைப்பற்றின நினைவும் தான் பரமாத்மாவுக்குச் சரீரபூதனென்னும் நினைவில்லாமையும் உண்டாகின்றன. இந்த ஸ்வதந்த்ராத்மப்ரமம் தேஹாத்மப்ரமம் முதலியவை அவனுடைய மாயையினால் விளைகின்றன. ஆகையால் வேதாந்தங்களை ஓதியுணர்ந்தவன் குருவே தெய்வமென்னும் புத்தியுடையவனாகி என்றும் மாறாமல் அனன்யப்ரயோஜனமான (வேறு ப்ரயோஜனங்களை எதிர்பாராத) பக்தியுடன் அந்த ஜகதீசனையே பணிய வேண்டும். தேஹம் ஆத்மாவல்லாததாயினும் ஆத்மா ஸ்வதந்த்ரனல்லாதவனாயினும் அங்ஙனம் அபிமானிக்கிற ஜீவனுடைய மனத்தினால் தேஹம் ஆத்மாவாகவும் ஆத்மா ஸ்வதந்த்ரனாகவும் தோற்றுகின்றன. ஸ்வப்னத்தில் அனுபவிக்கிற மனோரதங்களெல்லாம் நிலையற்றவையாயினும் நிலை நின்றவையாகத் தோற்றுவதுபோலவே தேஹம் ஆத்மாவாகவும் ஆத்மா ஸ்வதந்த்ரவஸ்துவாகவும் தோற்றுகின்றன. ஆகையால் அனுதிகர்மானுகுணமாகத் தேஹத்தை ஆத்மாவாகவும் பரமாத்மாவுக்கு மிகவும் பரதந்த்ரமாயிருக்கையையே ஸ்வரூபமாகவுடைய ஆத்மாவை ஸ்வதந்த்ரவஸ்துவாகவும் நினைக்கச்செய்கின்ற மனத்தைத் தேஹாத்மாக்களின் உண்மையை நிச்சயிக்கும் புத்தியால் தடுக்க வேண்டும். அதனால் அபயம் (எவ்விதத்திலும் பயமில்லாத மோக்ஷம்) உண்டாகும். சக்கரக்கையனு

கிய பகவானுடைய அவதாரங்களும் மிகவும் மங்கள மான அவ்வவதாரங்களில் செய்த செயல்களும் எவ்வெ வை உண்டோ, அவைகளைக் கேட்பதும், மற்றும் அப் பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை வெளியிடு கிற பாட்டுக்களையும் திருநாமங்களையும் வெட்கமின்றி ப்ரேமத்துடன் பாடுவதும் செய்துகொண்டு சரீரத்தில் ஆஸக்தியின்றித் திரியவேண்டும். இப்படி செய்வானா யின், அவனுடைய மனம் பகவானிடத்தில் ஊக்கமுற் று மெல்லமெல்ல அவனிடத்தில் நிலைப்படும்). இங்ஙா னம் பகவானுடைய அவதாரங்களையும் செயல்களையும் உட்கொண்ட பாட்டுக்களையும் திருநாமங்களையும் பாடு வதும் கேட்பதுமாகிற வ்ரதத்தில் நிலைநின்று தனக்கு அன்பனாகிய பகவானுடைய நாமஸங்கீர்த்தனத்தினால் அனுராகம் வளர்ந்து மனம் உருகப் பெற்று விலக்ஷண னாகிப் பித்தம் பிடித்தவன்போன்று உலகத்தவர்களைக் காட்டிலும் விலக்ஷணனாகி ஒருக்கால் பக்தர்களுக்குத் தோற்குந்தன்மையனான பகவானை நினைத்துச் சிரிப்ப தும், ஒருக்கால் அவனுடைய அனுபவத்திற்கு விச்சே தம் வருகையில் 'இத்தனைகாலம் என்னை உபேக்ஷித்த னையே' யென்று அழுவதும், ஒருக்கால் ஆவலின்மிகுதி யால் நேரே கண்டனுபவிக்க விரும்பி உரக்க முறையிடு வதும், ஒருக்கால் ஸந்தோஷத்தின் மிகுதியால் பாடுவ தும் ஆடுவதுமாயிருப்பான். ஆகாசம் காற்று அக்னி ஜலம் பூமி தேஜஸ்ஸுக்கள் ஜந்துக்கள் திசைகள் மரம் முதலியவை நதிகள் ஸமுத்ரங்கள் மற்றுமுள்ள ப்ராணி கள் இவையெல்லாம் பகவானுடைய சரீரங்களென்னும் எண்ணத்துடன் அவற்றை யெல்லாம் வணங்குவான். தன்னையும் பகவானுக்குச்சரீரமாகவும் ஆனதுபற்றி யே தன்னை அவனைக்காட்டிலும் வேறுபடாதவனாகவும்

பாவிப்பான். (மனத்தை அடக்குவதற்கு வேண்டிய உபாயங்களை அனுஷ்டிப்பதிலேயே ஆயுளெல்லாம் முடிந்துபோம்போலிருக்கிறதே. பிறகு மன அடக்கம் எப்பொழுது உண்டாகும்? பிறகு எப்பொழுதுதான் பகவத்பக்தி உண்டாகுமென்று சங்கிக்கவேண்டாம்). போஜனஞ் செய்பவனுக்குப் போதுமென்னும் புத்தியும் சரீரபுஷ்டியும் பசியின் அடக்கமுமாகிய இம்மூன்றும் ஆஹாரம் புசித்தவுடனே ஒரேகாலத்தில் உண்டாவது போல், பகவானைச் சரணம் அடைந்தவனுக்கு அந்தப் பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளைப் பற்றின தத்வஜ்ஞானமும் ப்ரீதிரூபமான பக்தியும் சப்தாதி விஷயங்களில் வைராக்யமும் ஆகிய இம் மூன்றும் ஒரே காலத்தில் உண்டாகின்றன. ராஜனே! பிறகு பசி தாஹம் முதலிய ஊர்மிகள் தொலையப் பெறுகையாகிற ஒன்றான மோக்ஷத்தைப் பெறுவான். ப்ராணிகளுக்கு த்ரோஹம் செய்யுந்தன்மையைத் துறந்து ஸமஸ்த ப்ராணிகளிடத்திலும் ஸ்னேஹம் உண்டாகப்பெற்று இந்த்ரியங்களால் விளையும் அறிவுகளுக்கெட்டாத பகவானிடத்தில் மிகவும் நிலைநின்ற மனமுடையவனும் சுத்த ஸ்வபாவனுமாகி, ஸூர்யன் உதித்துத் தன்கிரணங்களால் உலகங்களைப் புனிதஞ் செய்வதுபோல், தன்பாத தூளிகளால் மூன்று லோகங்களையும் புனிதஞ் செய்வான்.

மன்னவன் சொல்லுகிறான்:—பகவானைச் சரணம் அடைந்த பாகவதனைப் பற்றிச் சொல்வீர்களாக. அவன் எத்தகைய தர்மங்களை அனுஷ்டிப்பான்? மனுஷ்யர்களுக்குள் அவன் எத்தகைய ஸ்வபாவமுடையவனாயிருப்பான்? அவனுடைய ஆசாரம் எத்தகையதாயிருக்கும்? அவன் பேச்சு எத்தகையதாயிருக்கும்? (எந்த

அடையாளங்களால் அவன் பாகவதனென்று அறியலாமோ அத்தகைய அடையாளங்களைச் சொல்வீர்களாக).

ஹரி சொல்லுகிறான்:—ப்ரஹ்மதேவன் முதல் பூச்சி புழு வரையிலுள்ள ஸமஸ்த பூதங்களிலும் தன்னிடத்திலும் பகவான் அமைந்திருக்கிறானென்றும் ஸமஸ்த பூதங்களும் தானும் பகவானுக்குச் சரீரங்களென்றும், பரமாத்மாவான அப்பகவானிடத்தில் ஸமஸ்த பூதங்களும் அமைந்திருக்கின்றனவென்றும் எவன் ஆராய்ந்தறிகிறானோ, அவன் பாகவதோத்தமன். (இதுவே பாகவதன் அனுஷ்டிக்குந்தர்மம்). ஈஶ்வரன் ஸர்வாந்தராத்மாவென்றும் எங்கும் நிறைந்தவனென்றும் அறியாமல் அவனிடத்தில் கேவலம் தெய்வமென்னும் புத்தியையும், அவனுக்கு உட்பட்ட பாகவதர்களிடத்தில் ஸ்னேஹத்தையும், ஒன்றும் அறியாத மூடர்களிடத்தில் தயையையும், த்வேஷிகளிடத்தில் உதாஸீனபுத்தியையும் எவன் செய்கிறானோ, அவன் பாகவதர்களில் மத்யமன். எவன் ப்ரதிமையில்மாத்ரம் பகவானுக்குப் பூஜை செய்கிறானோ, எவன் பக்தர்களிடத்திலும் பசுக்கள் ப்ராஹ்மணர் அக்னி முதலியவைகளிடத்தில் அந்தப் பகவானுக்குப் பூஜை செய்கிறதில்லையோ, அவன் ப்ராக்ருதபக்தன். (பாகவதர்களில் அதமன்-அப்பொழுதுதான் புதிதாகப் பகவானிடத்தில் பக்தி செய்ய ஆரம்பித்தவன்). இவ்வுலகத்திலுள்ள விஷயங்களெல்லாம் பகவானுடைய மாயையின் பரிணாமமேயென்று நிச்சயித்து இஷ்டமான விஷயங்களையாவது அனிஷ்டமான விஷயங்களையாவது இந்த்ரியங்களால் க்ரஹித்தும் எவன் இஷ்ட விஷயங்களை விரும்புவதும் அனிஷ்ட விஷயங்களை த்வேஷிப்பதும் செய்யாதிருக்கிறானோ, அவன் பாகவதோத்தமன். எவன் பகவானிடத்தில் மனம்

செல்லப்பெற்றுத் தேஹத்தின் ஜன்ம மரணங்கள், ப்ராணன்களின் வாட்டமாகிற பசி, என்ன வருமோ என்று மனத்தின் கலக்கமாகிற பயம், புத்தி விஷயங்களில் இவற்றைப் பெறவேண்டுமென்று செல்லுகையாகிற ஆசை, இந்த்ரியங்கள் ஶ்ரமப்படுகையாகிற வருத்தங்கள் ஆகிய ஸம்ஸார தர்மங்களால் எவன் மோஹியாதிருக்கிறானோ, அவன் பாகவதர்களில் சிறந்தவன். காமம் காமத்திற்கு விதைகள்போன்ற கர்மங்கள் கர்மவாஸனைகள் ஆகிய இவை எவன்மனத்தில் சிறிதும் உண்டாகாதிருக்கின்றனவோ, ஜகத்திற்கெல்லாம் ஆதாரனும் ஜகத்தை ஆதாரமாக வுடையவனுமாகிய வாஸுதேவனையே எவன் ஆஶ்ரயித்திருக்கிறானோ, அவன் பாகவதர்களில் சிறந்தவன். (இவையே பாகவதனுடைய ஆசாரங்களாம்). ஜன்மம் கர்மம் ப்ராஹ்மணாதிவர்ணம் ப்ரஹ்மசர்யாதி ஆஶ்ரமம் தேவத்வ மனுஷ்யத்வாதி ஜாதிகள் ஆகிய தேஹ தர்மங்களால் எவனுக்குத் தேஹத்தில் அஹம்பாவம் (நானென்னும் புத்தி-ஆத்மாபிமானம்) உண்டாகாதிருக்கின்றதோ; அவன் பகவானுக்கு மிகவும் அன்பனாயிருப்பான். 'இவன் பந்து. இவன் சத்ரு' என்னும் பேதபுத்தியும் பணங்களிலும் தேஹத்திலும் 'இது என்னுடையது. இது பிறனுடையது' என்னும் பேதபுத்தியும் இன்றி எவன் ஸமஸ்த பூதங்களிடத்திலும் ஸமனாகி இந்த்ரியங்களை அடக்கிக்கொண்டிருக்கிறானோ, அவன் பாகவதர்களில் சிறந்தவன். மூன்று லோகங்களுக்கும் ப்ரபுவாயிருக்கையாகிற ஐஶ்வர்யத்தை உனக்குக் கொடுக்கிறேனென்று சொல்லினும், அதைப் பொருள் செய்யாமல் பகவானுடைய பாதாரவிந்தங்களைக்காட்டிலும் ஸாரமானது மற்றொன்றும் இல்லை யென்னும் நினைவு

எப்பொழுதும் மாறப்பெறாமல் ஒருவராலும் வெல்ல முடியாத மஹானுபாவனாகிய அப் பரமபுருஷனிடத்தில் நிலைநின்ற மனமுடைய ப்ரஹ்மாதிதேவர்களுக்கும் தேடத்தகுந்தவையாகிய அந்தப் பகவானுடைய பாதாரவிந்தங்களைப் பணிகையினின்று எவன் மீளாதிருக்கிறானோ, அவன் விஷ்ணுபக்தர்களில் சிறந்தவன். பகவானைச் சரணம் அடைந்த பாகவதர்களின் ஹ்ருதயம், பெரிய அடிவைப்புக்களுடையவைகளான (ஓரடியில் உலகங்களையெல்லாம் அளக்கவல்ல பெருமையுடையவைகளான) பகவானுடைய பாதாரவிந்தங்களின் கிளைகள்போன்ற விரல்களிலுள்ள நகங்களாகிற ரத்னங்களின் குளிர்ந்த ஒளிப்பெருக்கினால் தாபங்களெல்லாம் தீரப்பெற்றிருக்கும். அத்தகையதான பாகவதர்களின் ஹ்ருதயத்தில் மீளவும் தாபங்கள் எங்ஙனம் உதிக்கும்? சந்த்ரன் உதித்திருக்கும் பொழுது ஸூர்யகிரணங்களால் விளையும் தாபம் உண்டாகுமோ? (இங்ஙனம் தாபமே உண்டாகப் பெறாதவர்கள் பகவானுடைய பாதாரவிந்தங்களினின்று எங்ஙனம் சலிப்பார்கள்?) மன்னவனே! பாகவதர்களின் ஸ்வபாவம் இத்தகையதாயிருக்கும். மனோபாவமின்றி அவசமாகச் சொன்னபோதிலும் பாபராசிகளைப் போக்கவல்ல மஹானுபாவனாகிய பரமபுருஷன் தானே நேரில் வந்து ப்ரீதியின் பெருக்காகிற சங்கிலியால் கட்டுண்ட பாதாரவிந்தங்களுடையவனாகிய எவனுடைய ஹ்ருதயத்தை எப்பொழுதும் விடாதிருக்கிறானோ, அவன் பாகவதோத்தமனென்று சொல்லப்படுவான். இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

{ பகவானுடைய மாயையின் ஸ்வரூபத்தையும் அதைக் கடக்கும் வழியையும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் பாகவதர் அனுஷ்டிக்க வேண்டிய கர்மஸ்வரூபத்தையும் கூறுதல். }

நிமிமன்னவன் சொல்லுகிறான்:— *ஸர்வஸ்மாத்பரனும ஸர்வநியாமகனுமாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவின்மாயை மாயாவிகளையும் மதிமயங்கச் செய்யுந் திறமையுடையது. அத்தகைய மாயையின் ஸ்வரூபத்தையும் அதன் கார்யத்தையும் அறிய விரும்புகிறேன், மஹானுபாவர்களாகிய நீங்கள் அதை எனக்குச் சொல்வீர்களாக. (நீங்கள் மாயையின் ஸ்வரூபத்தை முன்னமே சுருக்கமாகச் சொன்னீர்கள். ஆயினும் அதை விசதமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்). ஸம்ஸார தாபங்களால் மிகவும் தபிக்கப்பட்டவனும் மரணம் அடையுந் தன்மையனுமாகிய நான் பகவானுடைய கதைகளாகிற அம்ருதத்தை உட்கொண்டிருப்பதும் அந்த ஸம்ஸார தாபங்களைப் போக்கும் மருந்துமாகிய உங்கள் வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருப்பினும் அதில் த்ருப்தி உண்டாகப் பெறாதிருக்கின்றேன்.

அந்தரிக்ஷன் சொல்லுகிறான்:— ஸ்தூல சேதனாசேதன ரூபமான ஜகத்தாய் விரிய வேண்டுமென்று விரும்பின பகவான் எதைக் கொண்டு இந்த ஜகத்தையெல்லாம் படைத்தானோ, அத்தகையதான இந்தப் பகவானுடைய மாயை ஸத்வாதிகுணங்களின் ஸம்பந்தமற்றதும் சரீரஸம்பந்தமின்றிப் பரிசுத்தமாயிருப்பதும் ஸ்வயம்ப்ரகாசமுமாகிய ஜீவனுடைய ஸ்வரூபத்தில் சரீரஸம்பந்தம் ஸத்வாதிகுணங்களுக்கு உட்பட்டிருக்கை தேஹாத்மப்ரமம் முதலிய விபரீதங்களை

* ஸர்வஸ்மாத் - எல்லாவற்றிலும், பரனும் - மேலானவனும்.

விளேக்குந்தன்மையது. (பகவானுடைய மாயை ஸத்வ ரஜஸ்தமோகுணங்களின் ஸமுதாயரூபமும் தேஹம் இந்த்ரியம் முதலியவைகளாய்ப் பரிணமிக்குந்தன்மைய தும் ஜடமுமாயிருக்கும். சுத்தஸ்வரூபனுன ஜீவாத்மா வினிடத்தில் சரீரஸம்பந்தம் தேஹாத்மப்ரமம் முதலிய விபரீதங்களே விளேக்கை அந்தமாயையின் கார்யமே. மற்றும், மஹத்து முதல் ப்ருதிவி வரையிலுள்ள ஜகத் தும் அதன் கார்யமே). ஜாக்ரதவஸ்தையில் (விழித்துக் கொண்டிருக்கும் பொழுது) மனத்தின் ஸம்பந்தமுடைய இந்த்ரியங்களால் ஆத்மாவல்லாததும் நிலேயற்றதுமா கிய தேஹம் முதலிய வஸ்துக்களில் ஆத்மாவென்றும் நிலேநின்றதென்றும் இது முதலிய ப்ரமம் உண்டாகின்றது. ஸ்வப்னுவஸ்தையில் (கனுக்காணும்பொழுது) வெளி யிந்த்ரியங்களோடு ஸம்பந்தப்படாத அந்தக்கரணத்தி ஞல் ப்ரமம் உண்டாகின்றது. அதுவும் ஸ்வப்னத்தில் காண்கிற நிலேயற்றதான தேஹாதிவஸ்துக்களில் நிலே நின்றதென்னும் இது முதலிய ப்ரமமே. பாஹ்யமான ப்ராஹ்மணத்வம் முதலிய தர்மங்களேப் பற்றின அறிவும் ஆந்தரமான ஸுகம் துக்கம் முதலியவற்றைப்பற்றின அறிவுமின்றி அவற்றிற்கு மூலமான கர்மவாஸனே யொன்றுமாத்ரமே மிகுந்திருக்குந்தசை ஸுஷுப்தி யென்னும் அவஸ்தையென்று கூறப்படும். அதுவும் ப்ர க்ருதியின் கார்யமே. (ஜீவனுக்கு பாஹ்யேந்த்ரியங்கள் அந்தரிந்த்ரியமான மனம் அவற்றிற்கு ஆதாரமான தேஹம் அதனுல் ஏற்பட்ட ஜாக்ரத்து முதலிய அவஸ் தைகள் ஆகிய இவையெல்லாம் மாயையெனப்படுகிற ப்ர க்ருதியின் கார்யமாய் உண்டாயிருப்பவை.) ஜீவனுக்கு ஜாக்ரத்து ஸ்வப்னம் ஸுஷுப்தி என்னும் இம் மூன்று அவஸ்தைகளில் ஏதேனுமொன்று மாருதிருக்கும்.

(ஆனால் இம் மூன்று அவஸ்தைகளும் ஜீவனுக்கு எப்பொழுது நிவர்த்திக்குமென்றால்) ப்ரக்ருதியின் பரிணாமமான சரீரம் விட்டு முக்தாவஸ்தை எப்பொழுது நேரிடுமோ, அப்பொழுதுதான் இம் மூன்று அவஸ்தைகளும் நிவர்த்திக்கும். தேஹஸம்பந்தத்தினால் விளையும் அவஸ்தைகள் மூன்றும் தீண்டப்பெறாத முக்தியே நான்காமவஸ்தை. (ஜாக்ரத்து முதலிய அவஸ்தைகள் மூன்றும் ப்ராக்ருதசரீரஸம்பந்தத்தினால் விளைபவையாகி ஔபாதிகங்களாகையால் நிலையற்றவை. அவற்றை நிலைநின்றவையென்று நினைப்பது ப்ரமமே). ஜீவஸ்வரூபம் ராகம் த்வேஷம் முதலியவை தீண்டப்பெறாமல் பரிசுத்தமாயிருப்பது; ஜாக்ரத்து முதலிய அவஸ்தாபேதங்களின்றி என்றும் ஒருவாறாயிருப்பது; ஜ்ஞானத்தையே வடிவாக உடையது. ஆயினும் அந்த ஜீவஸ்வரூபம் ப்ரக்ருதியின் பரிணாமமான தேஹஸம்பந்தத்தைப் பெற்று ஸ்வப்னத்தில் காண்கிற யானை குதிரை முதலியவை நிலையற்றவையாயினும் நிலைநின்றவையாகத் தோற்றுவதுபோல், இந்த்ரியம் முதலியவைகளால் ஜாக்ரத்து ஸ்வப்னம் ஸுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளையுடையதுபோல் தோற்றுகிறதும் தேஹம் இந்த்ரியம் மனம் இவற்றின் ஸம்பந்தம் உண்டாகப்பெறுவதும் ஆகிய இதெல்லாம் ஜ்ஞானஸ்வரூபனான ஜீவனுடைய அநாதியான புண்ய பாபரூபமான கர்மத்தின் பலனாய் விளைகின்றது. மாயையின் கார்யமான ஜாக்ரத்து முதலிய இம் மூன்று அவஸ்தைகளும் முக்த்யவஸ்தையில் தொடராமையாலும் அதற்கு முன்பும் ஓரவஸ்தையில் மற்றோரவஸ்தை தொடராமையாலும் ஜீவனுடைய அநாதியான புண்ய பாப ரூப கர்மத்தின்பலனாக ஏற்பட்டவையேயன்றி அவனுக்கு இயற்கையில் ஏற்பட்ட

வயைன்று. ஸ்வப்னத்தில் அனுபவிக்கிற ஸுகம் எ
றதாகிக் கர்மத்தின் பலனாக எங்ஙனம் விளைகின்றதோ, அங்ஙனமே அநித்யங்களான இவ்வவஸ்தைகளும் கர்ம பலன்களே. இங்ஙனம் இவ்வுண்மையை ஆராய்ந்தறிவானாயின், அற்பஸுகங்களுக்காகச் செய்யும் வ்யாபாரத்தினின்று மீளுவான். ஸர்வகாரணனாகையால் தான் முன்னமே ஸித்தமாயிருக்கின்ற மஹாபுஜனாகிய பரமபுருஷன் ஸமஸ்தபூதங்களுக்கும் அந்தராத்மாவாகி ப்ரத்யக்ஷாதி ப்ரமாண ஸித்தங்களான இந்த ப்ருதிவி முதலிய மஹாபூதங்களைக்கொண்டு தனக்குச் சரீரபூதர்களான ஜீவாத்மாக்களின் புருஷார்த்த ஸித்திக்காக மேன்மையும் தாழ்மையுமான பலபூதங்களைப் படைத்தான். (ஜீவாத்மாக்கள் தன்னை ஆராதிப்பதற்கு உபயோகப்படக்கூடியவைகளான கரண களேபரங்களைப் பெற்றுத் தன்னை ஆராதித்து மோக்ஷரூபமான சிறந்த புருஷார்த்தத்தைப் பெறவேண்டு மென்று பரமபுருஷன் ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணினான்). (ஆனால் கரண களேபரங்களைப் பெற்ற ஜீவாத்மாக்கள் அனைவரும் பகவானை ஆராதித்து மோக்ஷத்தை ஏன் பெறவில்லையென்றால், சொல்லுகிறேன்.) இங்ஙனம் ஈஸ்வரன் பஞ்ச மஹாபூதங்களைக் கொண்டு ஸ்ருஷ்டித்த சரீரங்களில் ஜீவன் ப்ரவேசித்து ஜ்ஞானேந்த்ரியங்கள் கர்மேந்த்ரியங்கள் அந்தக்கரணம் ஆகிய பதினொரு வழிகளில் தன்ஜ்ஞானத்தைச் செலுத்திச் சப்தாதி விஷயங்களை அனுபவிக்கிறானன்றி ஈஸ்வரனை ஆராதிக்கிறதில்லை. அந்த ஜீவன் பரமபுருஷனை ஆராதித்து மோக்ஷத்தைப் பெறவல்லவனாயினும் பகவானால் படைக்கப்பட்ட சரீரத்தை ஆத்மாவாக நினைத்து அந்தர்யாமியாகிய பரமபுருஷனால் கார்யங்களில் நன்கு முயலுக்

திறமை அளிக்கப்பெற்ற இந்த்ரியங்களால் சப்தாதிவிஷயங்களை அனுபவித்துக்கொண்டு மேன்மேலும் இந்த விஷயங்களிலேயே மனப்பற்று செய்கின்றான். இந்த ஸம்ஸாரத்தில் ஜீவன் பூர்வஜன்மத்தில் ஏற்பட்ட கர்ம வாஸனைகளால் மேன்மேலும் தேஹ ஸம்பந்தத்திற்கு ஹேதுவான வாஸனைகளோடு கூடிப் புண்ய பாபகர்மங்களைச் செய்துகொண்டு அந்தந்த கர்மங்களின் பலனான ஸுக துக்கங்களை அனுபவியாநின்றுகொண்டு துக்கமே மிகுந்திருக்கப்பெற்றுச் சுழன்றுகொண்டிருக்கின்றான். இங்ஙனம் ஜீவன் புண்ய பாபகர்மங்களால் விளைகிறவைகளும் பற்பல துக்கங்களை விளைப்பவைகளுமான தேஹங்களைப் பெறுகின்றுகொண்டு ப்ரக்ருதிக்கு உள்பட்டு மஹாபூதப்ரளயம்வரையில் ஜன்மமரணங்களை மாறிமாறி அனுபவிக்கிறான். (மஹாபூதப்ரளயம் எத்தகையதென்றால், சொல்லுகிறேன், கேள்). மஹாபூதப்ரளயம் ஸமீபித்திருக்கும்பொழுது ஆதியந்தமில்லாத காலத்தைச் சரீரமாகவுடைய பரமபுருஷன் பஞ்ச பூதங்களும் சப்தாதி விஷயங்களுமாகிய ஸ்தூலரூபமான ப்ரபஞ்சத்தை நாமரூபவிபாகமில்லாததும் தமஸ்ஸென்று கூறப்படுவதுமாகிய ஸூக்ஷ்மப்ரக்ருதிக்குப் பிடித்திழுக்கிறான் (ஸூக்ஷ்மப்ரக்ருதியில் மறையும்படி ஸங்கல்பிக்கிறான்). அப்பொழுது நூறுவருஷங்கள்வரையில் மிகவும் பொறுக்கமுடியாத அனாவ்ருஷ்டி உண்டாகும். அத்தகைய அனாவ்ருஷ்டிகாலத்தினால் மிகுதியும் உஷ்ணம் வளரப்பெற்ற ஸூர்யன் மூன்று லோகங்களையும் எரிப்பான். ஸங்கர்ஷணனுடைய முகத்தினின்று மேல்நோக்கி யெரிகின்ற ஜ்வாலைகளையுடைய அக்னி காற்றினால் தூண்டப்பட்டுப் பாதாளம்முதல் உலகங்களை யெல்லாம் தஹித்துக்கொண்டு நாற்

புறத்திலும் வளர்ந்துவரும். அப்பால் ஸாம்வர்த்தகமென்கிற ப்ரளயகாலத்து மேகங்களின் கூட்டம் யானைத் துதிக்கைகள்போன்ற ஜலதாரைகளுடன் நூறுவர்ஷங்கள்வரையில் மழை பெய்யும். அதனால் ப்ரஹ்மாண்டம் ஜலத்தில் முழுகிப்போம். மன்னவனே! அனந்தரம் ப்ரஹ்மாண்டத்திற்குள்ளிருக்கிற ஜீவவர்க்கம் ஜலத்தில் மூழ்கின அந்த ப்ரஹ்மாண்டத்தை விட்டுத் தமஸ்ஸென்கிற ஸூக்ஷ்மப்ரக்ருதியில் மறைகின்றது. அப்பொழுது அந்த ஜீவவர்க்கம் ஜ்ஞானஸங்கோசத்தை அடைந்து கட்டையில்லாத அக்னி போன்றிருக்கும். அனந்தரம் ப்ரளயகாலவாயுவினால் கந்தமென்னும் தன்குணம் பறியுண்ட பூமி ஜலமாய் விடும் (ஜலத்தில் மறையும்). அந்த ஜலமும் அந்த ப்ரளயவாயுவினால் ரஸமென்கிற தன்குணம பறியுண்டு தேஜஸ்ஸாய்விடும் (தேஜஸ்ஸில் மறையும்) அனந்தரம் ப்ரளயகாலத்திலுண்டான தமஸ்ஸினால் ரூபமென்கிற தன் குணம் பறியுண்ட தேஜஸ்ஸு வாயுவில் மறைகின்றது. தனக்குக் காரணமும் லயம் ஸமீபிக்கப் பெற்றிருப்பதுமாகிய ஆகாசத்தினால் ஸ்பர்சமென்கிற தன்குணம் பறியுண்ட வாயு ஆகாயத்தில மறைகின்றது. காலத்தைச் சரீரமாகவுடைய ஈச்வரனால் சப்தமெனகிற தன் குணம் பறியுண்ட ஆகாசம் தன்காரணமான பூதாதியில் மறைகின்றது. கர்மேந்த்ரியங்கள் ஜ்ஞானேந்த்ரியங்கள் ஆகிய பத்து இந்த்ரியங்களும் மனம் புத்தி இவைகளும் தத்தம் அதிஷ்டானதேவதைகளுடன் தம்காரணமாகிய ஸாத்விகாஹங்காரத்தில் பிரவேசிக்கின்றன. அவ்வஹங்காரம் தன்கார்யங்களுடன் தன்காரணமான மஹத்தத்வத்தில் மறைகின்றது. அந்த மஹத்தத்வத்திற்கும் காரணமாகிய பகவானுடைய

இம்மாயை ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு உபயோகப்படுந்தன்மையது; சிவப்பு வெளுப்பு கறுப்பு என்னும் இவ்வர்ணங்களை யுடையது (சிவப்பு வர்ணமுடைய ரஜஸ்ஸு, வெளுப்பு வர்ணமுடைய ஸத்வம், கறுப்பு வர்ணமுடைய தமஸ்ஸு ஆகிய இக்குணங்களையே வடிவாகவுடையது.) இங்ஙனம் மாயையின் ஸ்வரூபத்தையும் அதன் கார்யத்தையும் உனக்கு மொழிந்தோம். இன்னம் எதைக் கேட்க விரும்புகின்றனை?

மன்னவன் சொல்லுகிறான்:—மஹர்ஷீ! இந்த்ரியங்களை வெல்ல முடியாதவர்களால் கடக்க முடியாத இத்தகைய ஈஸ்வரமாயையைப் புத்தி ஸூக்ஷ்மமில்லாத எங்களைப்போன்றவர் எப்படி ஸுகமாகத் தாண்டக்கூடுமோ, அந்த உபாயத்தைச் சொல்லவேண்டும். (மதியுடையவன் பகவானிடத்தில் பக்தியை வளர்த்திக்கொண்டு அதனால் மாயையைக் கடந்து அப்பகவானை அடையவேண்டுமென்று முன்னமே மொழிந்தமையால் பக்தியே இதற்கு உபாயமென்று ஏற்படுகின்றது. ஆயினும் மதியில்லாத மந்தர்களுக்குப் பகவானிடத்தில் பக்தி உண்டாவது அரிதாகையால் ஏதேனுமொருவழியில் அவர்கள் அதைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டும். ஆகையால் அதற்கு வழியென்னென்று தெரிந்துகொள்வதற்காக மீளவும் வினவுகிறேன்.)

ப்ரபுத்தன் சொல்லுகிறான்:—ஆணும் பெண்ணுமாய்க் கலந்திருக்கும் ப்ராணிகள் அனிஷ்டபரிஹாரத்திற்காகவும் இஷ்டப்ராப்திக்காகவும் பற்பல கர்மங்களைச் செய்துகொண்டிருப்பினும் அவர்களுடைய நினைவுக்கு நேரே விரோதமாக அனிஷ்டமே விளைவதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். துர்லபமும் மரணாந்தமான ஸாஹஸகார்யங்களைச் செய்து ஸம்பாதிக்கவேண

டியதாகையால் ம்ருத்யுவைப்போன்றதும் என்றும் வருத்தத்தையே விளைப்பதுமாகிய பணத்தையும் அநித்யங்களான வீடு வாசல் பிள்ளை நண்பர் பசுக்கள் முதலியவற்றையும் வேண்டியவளவு ஸாதித்துக்கொள்வானாயினும்அவற்றால் என்ன ஸுகம் உண்டாகும்? ஒரு ஸுகமும் உண்டாகாது. இவ்வுலகத்தில் பணம் வீடுவாசல் முதலியவற்றால் விளையும் ஸுகம் நிலையற்றதும் கடைசியில் துக்கத்திற்கே ஹேதுவுமாயிருப்பதுபோல் ஸ்வர்க்காதி பரலோக ஸுகமும் நிலையற்றதென்றே அறிய வேண்டும். ஏனென்றால், அதுவும் ப்ராணிகளுடைய கர்மத்தினால் விளையுமதல்லவா? மற்றும், அது வர்த்தமான தசையிலும் துக்கரூபமாகவே இருக்கும். ஏனென்றால், மண்டலேச்வரர்கள் தன்னைப்போலவே மற்றவர்களும் ஸுகிப்பதைக் கண்டு தத்தம் ஸுகத்தில் அவ்வளவாக ஆதரம் உண்டாகப்பெறாதிருப்பது போலவே ஸ்வர்க்காதி லோகங்களிலும் தங்களைப்போல் பிறரும் ஸுகிப்பதைக் கண்டு தங்கள்ஸுகத்தை ஆதரிக்கமாட்டார்கள். மற்றும், தங்களைக்காட்டிலும் மேற்பட்ட ஸுகம் அனுபவிப்பவர்களைக்கண்டு தங்கள் ஸுகத்தை இதென்ன ஸுகமென்று உபேக்ஷிக்கும்படியாயிருக்கும். இதுவும் நிலை நிற்பதன்றே யென்று நினைக்கில் பரிஹரிக்கமுடியாத மஹத்தான பயமும் உண்டாகும். ஸ்வர்க்காதிபரலோக ஸுகமும் இங்ஙனம் இணையும் எதிரும் அழிவுமுடையதாகையால் துக்கரூபமாகவேயிருக்கும். இங்ஙனம் இஹபரஸுகங்களிரண்டும் நிலையற்றதாகையால் அதில் வெறுப்புற்று நிலை நின்றதாகிய சிறந்த நன்மையை அறிய விரும்பி வேதங்களை நன்குணர்ந்தவனும் யோகத்தினால் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூப ரூப குணவிபூதிகளை ஆராய்ந்தறிந்தவனும் ராக

த்வேஷாதிகள் நீண்டப் பெறுதவனுமாகிய குருவைப் பற்றவேண்டும். அந்தக் குருஸந்நிதியில் அக்குருவையே தனக்குத் தெய்வமாக நினைத்து அவனுக்குக் கபடமின்றிப் பணிவிடைகள் செய்து பாகவத தர்மங்களை அப்யஸிக்கவேண்டும். ஸர்வாந்தராத்மாவும் தன்னைப் பற்றுகிறவர்களுக்குத் தன்னைக் கொடுக்கும் மஹோதாரனுமாகிய பரமபுருஷன் அப் பாகவத தர்மங்களால் ஸந்தோஷம் அடைவான். (அவை யாவையெனில், சொல்லுகிறேன்.) முதலில் தேஹம் தேஹானுபந்திகள் ஆகிய அனைத்திலும் மனப்பற்றில்லாமையை அப்யஸிக்கவேண்டும். மனவருத்தமுற்ற ப்ராணிகளிடத்தில் தயையையும் தன்னோடொத்தவர்களிடத்தில் ஸ்னேஹத்தையும் தனக்கு மேற்பட்டவர்களிடத்தில் வணக்கத்தையும் அவரவர்களுக்குத் தகுந்தபடி நிஷ்கபடமாக அப்யஸிக்கவேண்டும். ஸ்னானாதிகளால் விளையும் பாஹ்யசுத்தியும் விஷ்ணுசிந்தனத்தினால் விளையும் ஆந்தரசுத்தியும் ஆகிய இரண்டு விதமான சுத்தி, தத்தம் வர்ணாஶ்ரமங்களுக்கு உரிய தர்மங்களை அனுஷ்டிக்கை, உபவாஸாதி ரூபமான தவம், ஸுகதுக்காதிகளைப் பொறுக்கை, மனோவாக்காயங்கள் மூன்றும் ஒத்திருக்கையாகிற ஆர்ஜவம், ருதுகாலம் தவிர மற்ற காலங்களில் ஸ்த்ரீஸங்கமில்லாமை, ப்ராணிகளுக்கு த்ரோஹம் செய்யாமை, த்வந்த்வங்களென்கிற சீத உஷ்ண ஸுக துக்காதிகளால் ஸ்வபாவம் மாறப்பெறுமல் அவைகளைத் துல்யமாகப் பாவிக்கை, ஸமஸ்த சேதனங்களிலும் ஸமஸ்த அசேதனங்களிலும் ஈஶ்வரன ஒருவாறுகவே அமைந்திருக்கிறுனென்னும் பாவனை, ப்ரக்ருதியின் பரிணாமமான தேவமனுஷ்யாதி ஸகல சரீரங்களிலும் ஜீவாத்மாக்கள் அனைவரும் ஜ்ஞானத்

தையே வடிவாகவுடையவராகையால் ஒருவாறுயிருப்பவரென்னும் பாவனே, அந்த ஜீவாத்மாக்கள் அனைவரிடத்திலும் ஈஶ்வரன் உள்ளே புகுந்து ஒருவாறுகவே நியமித்துக் கொண்டிருக்கிறுனென்னும் பாவனே, தேஹம் தவிர மற்ற பரிக்ரஹங்களில்லாமை, க்ருஹம் முதலியவற்றில் அபிமான மற்றிருக்கை, பரிசுத்தமான மரவுரிகளே உடுத்திக்கொள்தல், ஏதேனும் தெய்வாதீனமாய்க் கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷ முற்றிருக்கை, பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளே அறிவிக்கிற சாஸ்த்ரத்தில் மிகுந்த ஆதரம், தேவதாந்தரவிஷயமானவற்றில் நிந்தை, ப்ராணுயாமங்களால் மனத்தையும் பொய் பேசாமையால் வாக்கையும் அனீஹையினுல் கர்மத்தையும் உபவாஸாதிகளால் சரீரத்தையும் அடக்குகை, ப்ராணிகளுக்கு ஹிதஞ்செய்கையாகிற ஸத்யம், அந்தக்கரண நிக்ரஹம், பஹிரிந்த்ரிய நிக்ரஹம், அற்புதச்செயலுடையவனுகிய பகவானுடைய அவதாரம் செயல்கள் குணங்கள் இவற்றைக் கேட்கை, கீர்த்தனஞ் செய்கை, த்யானிக்கை, செயல்களே யெல்லாம் பகவானுக்காகச் செய்கை (செய்யும் செயல்களே யெல்லாம் பகவானிடத்தில் அர்ப்பணஞ் செய்கை), யாகம் தானம் தவம் குளம் கிணறு முதலியன வெட்டுவிக்கை மற்றும் தனக்கு இஷ்டமான நடத்தை மனைவி மகன் மனை ப்ராணன் ஆகிய இவற்றை யெல்லாம் பகவானிடத்தில் அர்ப்பணஞ் செய்கை, இங்ஙனம் ஸ்ரீக்ருஷ்ணனேயே தனக்கு நாதனுகவுடைய மனுஷ்யர்களிடத்தில் ஸ்னேஹம், ஜங்கமஸ்தாவரரூபமான மற்ற பூதங்களிடத்தில் வெகுமதி, ஸாதுக்களான பெரியோர்களிடத்தில் பரிசுத்தமான பகவானுடைய புகழைப்பற்றி ஒருவர்க்கொருவர் பேசிக்

கொள்கை, அந்தப்புகழை அனுபவிக்கையால் ஒருவர்க்கொருவர் அனுராகமும் ஒருவர்க்கொருவர் ஸந்தோஷமும் உண்டாகப்பெறுகை ஆத்யாத்மிகம்முதலிய தாபங்களினின்று மனத்தைத் திருப்பிக்கொள்கை, பாபங்களின் ஸமூஹங்களைப் போக்கவல்ல மஹானுபாவனாகிய பிரமபுருஷனைத் தாங்கள் நினைப்பதும் ஒருவர்க்கொருவர் நினைவு மூட்டுவதுமாகி ஸாதனபக்தியால் ப்ரீதிரூபமான பக்தி உண்டாகப்பெற்று அதனால் உடம்பெல்லாம் மயிர்க்கூச்சம் உண்டாகப்பெறுகை, உலகத்தவர்களைக் காட்டிலும் விலக்ஷணர்களாகி ஒருகால் அச்சுதனைப் பற்றின சிந்தையால் ரோதனஞ் செய்கை, ஒருகால் சிரிக்கை, ஒருகால் ஸந்தோஷப்படுகை, ஒருகால் அவனைப்பற்றிப் பேசுகை, ஒருகால் நர்த்தனம் செய்கை, ஒருகால் கானஞ் செய்கை, ஒருகால் அந்தப் பகவானுடைய ஸ்வரூப ஸ்வபாவாதிகளை ஆராய்கை, கர்மத்தினால் விளையும் பிறவியற்ற அப்பரமபுருஷனை மனத்தினால் பெற்று ஸந்தோஷமுற்றிருக்கை ஆகிய இவ்விதமான பாகவத தர்மங்களை அப்யஸித்துக்கொண்டு ஸ்ரீமந் நாராயணனுடைய ஆராதனத்தில் நிலைநின்று அந்த ஆராதனத்தினால் உண்டான பக்தியினால் எவ்விதத்திலும் கடக்கமுடியாத பகவானுடைய மாயையை அனாயாஸமாகத் தாண்டுவான்.

ஜனகமன்னவன் சொல்லுகிறான்:—நாராயணனென்று பேர்பெற்றவனும் பரப்ரஹ்மமென்று கூறப்படுகின்றவனுமாகிய பரமாத்மாவின் ஸ்வரூப நிச்சயத்தை எமக்குச் சொல்வீர்களாக. நீங்கள் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நன்றாக ஆராய்ந்தறிந்தவர்களல்லவா?

பிப்பலாயனன் சொல்லுகிறான்:—மன்னவனே! சேதனாசேதன ரூபமான இந்த ஜகத்தின் ஸ்திதி ஸ்ருஷ்டி

ப்ரளயம் இவற்றிற்குக் காரணமும் தனக்குத் தானே காரணமன்றி வேறுகாரண மற்றதும் ஸ்வப்னம் ஜாக ரம் ஸுஷுப்தி இவற்றைக் காட்டிலும் வேறுபட்ட தான முக்தாவஸ்தை ஆகிய எல்லா அவஸ்தைகளிலும் ஜீவாத்மாக்களிடத்தில் அந்தராத்மாவாய் அமைந் திருப்பதும் தேஹம் இந்த்ரியங்கள் ப்ராணன்கள் ஹ்ரு தயம் இவை எதனுடைய தூண்டுதலால் முயற்சி கொள் கின்றனவோ அத்தகையதுமாகிய வஸ்துவே பரப்ரஹ்ம மென்று அறிவாயாக. மனம் வாக்கு முதலிய கர்மேந் த்ரியங்கள் கண் ஜீவன் ப்ராணன்கள் செவி முதலிய மற்ற இந்த்ரியங்கள் இவையெல்லாம், அக்னியின் ஜ்வா லைகள் அக்னியைப்போல், இப்பரப்ரஹ்மத்தை அறிய வல்லவையல்ல. வேதாந்தரூபமான சப்தமும் 'இப்பரப் ரஹ்மம் கண்முதலிய ஜ்ஞானேந்த்ரியங்களாலாவது வாக்கு முதலிய கர்மேந்த்ரியங்களாலாவது அறியப்படு வதன்று' என்று உலகத்தில் தத்தம் விஷயங்களை அறியவைகளாக ஏற்பட்டிருக்கின்ற சக்ஷுராதி இந் த்ரியங்களுக்கு விஷயமன்றென்று தெரிவிக்கின்றது. அவ்வழியால் அது பரமாத்மவிஷயத்தில் ப்ரமாண மாகின்றது. 'வேதாந்தங்கள் இந்த்ரியாதிகளுக்கு விஷயமன்றென்று நிஷேதிக்கிறதாயின் அவை பரப்ரஹ் மத்தை எப்படி அறிவிப்பவையாம்?' என்றால், இந்த்ரி யாதிகளுக்கு விஷயமன்றென்று நிஷேதரூபமான அர்த் தத்தின் மூலமாய் அதை அறிவிக்கின்றன. பரப்ரஹ் மம் இல்லாத பக்ஷத்தில் இந்த்ரியாதிகளுக்கு விஷயமன் றென்று எதை நிஷேதிக்கும்? நிஷேதமே ஸித்திக் காது. ஆகையால் நிஷேதரூபமான அர்த்தத்தினால் பரப்ரஹ்மம் உண்டென்று வேதாந்தங்கள் அறிவிக்கின் றன. (இங்ஙனம் பரப்ரஹ்மம் ப்ரத்யக்ஷம் முதலிய

மற்ற ப்ரமாணங்களால் அறிய முடியாததென்றும் வேதாந்தரூபமான சப்த ப்ரமாணத்தினால்மாத்ரமே அறியக்கூடியதென்றும் ஏற்படுகின்றது. இப்படியாயின் யோகாப்யாஸத்தினால் பரிசுத்தமான மனத்தினால் ப்ரஹ்மத்தை அறியக்கூடுமென்று வேதாந்தங்கள் முறையிடுகின்றனவாகையால் மனமும் ப்ரமாணமாயிருக்க, சப்தப்ரமாணம் ஒன்றே உள்ளதென்று எப்படி நிர்ணயிக்கமுடியுமென்றால், யோகபரிசுத்தமான மனம் ப்ரமாணமென்று அறிவதற்கும் வேதாந்தசப்தமே காரணமாகையால் வேதாந்த சப்தமொன்றே ப்ரமாணமென்று நிர்ணயிக்கத்தடையில்லை. ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களென்கிற மூன்று குணங்களே வடிவாயிருக்கப் பெற்றதும் கார்யங்களுக்குஆதாரமாகையால் ஸூத்ரம் போன்றதும் முதலிலிருப்பதுமாகிய ப்ரதானம் மஹத்து அஹங்காரம் இவைகளும் மற்றவைகளும் தத்வங்களென்றும், ஜீவன் நன்மை தீமைகளை அறிந்து கர்மங்களை அனுஷ்டித்து அவற்றின் பலனை ஸ்வர்க்காதிகளை அனுபவிப்பவனென்றும், ஜ்ஞானேந்த்ரியகர்மேந்த்ரியங்களால் சப்தாதி விஷயங்களைப்பெற்று அவற்றின் பலனை ஸுகதுக்கங்களை அனுபவிப்பவனென்றும் சொல்லுகிறார்கள். இத்தகைய சேதனா சேதனங்களெல்லாம் சிந்திக்க முடியாத பற்பல சக்திகளையுடைய பரப்ரஹ்மத்திற்குச் சரீரமாகி அதனால் நியமிக்கப்பட்டிருக்கின்றன. பரப்ரஹ்மமோவென்றால் அவற்றைக்காட்டிலும் வேறுபட்டு விலக்ஷணமாயிருக்கும். ஜீவன் உத்பத்திமரணம் வளர்தல் குறைதல் முதலிய விகாரங்களற்றவன். ஏனென்றால், அந்த ஜீவன் வருவதும் போவதுமாயிருக்கின்ற தேஹங்களின் வருங்காலம் போங்காலம் முதலிய அந்தந்த காலங்களை அறிந்தவன். (அவஸ்தை

களையுடைய வஸ்துக்களை ஸாக்ஷாத்கரிக்குந்தன்மை யுடையவன் அந்த அவஸ்தைகளை அடையமாட்டான்). அவன் தேவாதி சரீரங்களில் மோக்ஷம்வரையில் ஸர்வ காலமும் மாறுதிருப்பவன். அவன் கேவலஜ்ஞானஸ்வரூ பன். ப்ராணவாயு ஒன்றுயினும் ஸ்தான பேதத்தினு லும் கார்ய பேதத்தினுலும் பலபிரிவுகளைப் பெறுவது போல, ஜீவனும் ஒருவாருயிருப்பவனுயினும் இந்த்ரிய பலத்தினுல் 'காண்கிறேன், கேட்கிறேன்' என்னும் இவை முதலிய ஜ்ஞான விகற்பங்களுக்கிடமாயிருக்கின்றுன். அண்டஜம் ஜராயுஜம உத்பிஜ்ஜம் ஸ்வேதஜம் என்று பலவகைப்பட்ட அந்தந்த சரீரங்களில் ஜீவன் ப்ராண வாயுமூலமாய் ப்ரவேசித்து அவற்றைத் தரித்துக்கொ ண்டிருக்கிறுன். அவன் விகாரங்களின்றி என்றும் ஒரு வாருயிருப்பவன். (இத்தகையனுன ஜீவன் எல்லார்க்கும் அனுபவஸித்தனுயிருப்பானே வென்றுல், அது கிடை யாது.) இயற்கையில் விகாரங்களற்றவனுயினும் விகாரங் களுக்கிடமாகி இருந்தும் இல்லாதவன்போலவே இருப் பான்; ஸ்பஷ்டமாகத் தோற்றமாட்டான். 'ஆனுல், அந்த ஜீவன் எப்பொழுது ஸ்பஷ்டமாகத் தோற்றுவான்? அங்ஙனம் தோற்றுமைக்குக் காரணம் என்?" என்றுல்; இந்த்ரியங்களின்கூட்டமும் அஹங்காரம் முதலிய மனேவ்ருத்திகளும் ஒழிந்து சரீரஸம்பந்தமும் தொலை கையில் ஜீவாத்மாக்களாகிய நமக்கு நமது உண்மை யான ஸ்வரூபம் ப்ரகாசிக்கும். மனேவ்ருத்திகளும் தே ஹாத்மப்ரமமுமே ஆத்மஸ்வரூபம் தோற்றுமைக்குக் காரணம். தேஹாத்மாபிமானம் நீங்குமாயின், தேஹ த்தின் தோற்றமில்லாமல் ஆத்மஸ்வரூபம் உள்ளபடி ப்ரகாசிக்கும். (ஆனுல் அஹங்காரம் முதலிய மனே வ்ருத்திகள் எப்பொழுது நிவர்த்திக்கும்? ஆத்மஸ்வ

ரூபத்தைப்பற்றின நினைவு எதனால் உண்டாகும்?" என்றால், சொல்லுகிறேன்.) பணம் முதலியவற்றில் விருப்பங்களைத் துறந்து பத்மநாபனுடைய பாதாரவிந்தங்களில் என்றும் மாறாதபக்தி உண்டாகப்பெற்று அதனால் ஸத்வாதி குணங்கள் மூலமாய் விளைகிற புண்யபாபகர்மங்களால் உண்டாகிற ராகத்வேஷாதிகளான மனமலங்களை அழிக்கவேண்டும். எத்தகைய தோஷங்களுமின்றி நிர்மலமான கண்களையுடையவனுக்கு ஸூர்யனுடைய வெளிச்சம் தோற்றுவதுபோல், அங்ஙனம் ராகத்வேஷாதிகளற்றுப் பரிசுத்தமாயிருக்கின்ற மனத்தில் தேஹாதி உபாதிகளின்றிப் பரிசுத்தமாயிருப்பதும் பகவானுக்குச் சரீரமாயிருப்பதுமாகிய ஆத்மஸ்வரூபம் உள்ளபடி தோற்றும். பக்தி நிர்மலமான மனத்தினால் ஆத்மஸ்வரூபத்தின் உண்மையை ஸாக்ஷாத்கரிக்கலாம்.

மன்னவன் சொல்லுகிறான்:—ஜீவன் எதை அனுஷ்டித்தால் சீக்ரத்தில் புண்யபாபகர்மங்களை உதறி மனம் பரிசுத்தமாகப்பெற்று ஸம்ஸாரபந்தத்திற்கு ஹேதுவான ஸமஸ்த கர்மங்களின் நிவ்ருத்திக்குக் காரணமும் பரபக்தியென்றும் பரஜ்ஞானமென்றும் பெயருடையதுமாகிய ஜ்ஞானத்தைப் பெறுவானோ, அத்தகைய கர்மயோகத்தை எங்களுக்குச் சொல்லுவீர்களாக. முன்பு என் தந்தையாகிய இக்ஷ்வாகுவின் அருகில் ஸனகாதி முனிவர்கள் வந்திருக்கும்பொழுது இங்ஙனமே இந்தக் கேள்வியை நான் கேட்டேன். ப்ரஹ்மபுத்ரர்களாகிய அந்த ஸனகாதி முனிவர்கள் அதற்கு மறுமொழி கூறவில்லை. அதற்கு என்ன காரணமோ அதையும் சொல்வீர்களாக.

ஆவிர்ஹோத்ரன் சொல்லுகிறான்:—கர்மமென்றும் அகர்மமென்றும் விகர்மமென்றும் கர்மம் மூன்று

விதமாக வேதத்தில் வழங்கி வருகின்றது. இது உலகத்தில் வழங்கிவருவதன்று. அவற்றில் பலனை உத்தேசித்துச் செய்யுங் கர்மம் கர்மமென்றும், பலனை எதிர்பாராமல் ஜ்ஞானத்தை முன்னிட்டுச் செய்யும் கர்மம் அகர்மமென்றும், நிஷித்தகர்மம் விகர்மமென்றும் கூறப்படும். வேதம் ஈஶ்வரனுடைய அபிப்ராயரூபமாகையால் அதை உள்ளபடி அறிவது அருமை. அதில் வழங்கிவருகின்ற மூன்றுவகையான கர்மங்களிலும் அறியவேண்டிய அம்சங்கள் பலவாகையால் அவற்றை ஆராய்ந்தறிவது எளிதில் ஆகக்கூடியதன்று. ஆகையால் அவ்விஷயத்தில் பண்டிதர்களும் மதிமயங்குகிறார்கள். அதைப்பற்றி நீ பாலனுயிருப்பதை அறிந்து உனக்குப் பிடிபடாதென்று உன்கேள்விக்கு மறுமொழி கூறவில்லையேயன்றி வேறில்லை. (பரமபுருஷனுடைய ஆராதனரூபமான கர்மயோகம் வைதிகமென்றும் தாந்த்ரிகமென்றும் இருவகைப்பட்டிருக்கும். அவற்றில் வைதிகம் நித்யமென்றும் நைமித்திகமென்றும் காம்யமென்றும் மூன்றுவகைப்பட்டிருக்கும்.) ஹிதத்தையும் அஹிதத்தையும் அறிவிக்குந்தன்மையதாகிய இவ்வேதம் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களால் அறியமுடியாத அர்த்தங்களை மொழியுந் தன்மையது. அது அறியாத மூடர்களுக்கு அவ்வர்த்தங்களைத் தெளிவாக அறிவிக்கின்றது. ஆயினும் அப்பொருள்கள் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களுக்கு எட்டாதவையாகையால் அதன் அபிப்ராயத்தை எளிதில் அறியமுடியாது. அவ்வேதம் ஸ்வர்க்காதி பலன்களைக் குறித்து யாகாதிகர்மங்களை விதிக்கினும் அதற்கு அதில் அபிப்ராயமில்லை. உலகத்தில் குழந்தைகளுக்கு ஔஷதம் கொடுக்கிறவர்கள் 'இதைச் சாப்பிட்டால், உனக்குக் கற்கண்டு கொடுப்பேன்; லட்டு

கொடுப்பேன்' என்று ஆசைமூட்டி ஔஷதங் கொடுப்பதுபோல, வேதம் ஸ்வர்க்காதி பலன்களால் ஆசைமூட்டிப் புண்ய பாப கர்மங்களினின்று விடுபடும்பொருட்டு யஜ்ஞாதிகர்மங்களை விதிக்கின்றது. ஔஷதம் சாப்பிடுவதற்குக் கற்கண்டு லட்டு முதலியவை பலனன்றே. ஆரோக்யமே யல்லவா பலன். அங்ஙனமே யஜ்ஞாதி கர்மங்களுக்கு மோக்ஷமே பலனன்றி ஸ்வர்க்காதிகள் பலனன்று. இவர்களுக்கு அதில் ஆசை உண்டாகும்பொருட்டு ஸ்வர்க்காதிபலன்களைச் சொல்விற்றே யொழிய அதில் அபிப்ராயமன்று. ஆகையால் ஸ்வர்க்காதியான அவாந்தர பலன்களைத் துறந்து மோக்ஷத்தையே பலனாக உத்தேசித்துக் காம்யகர்மங்களையும் அனுஷ்டிக்கவேண்டும். (நித்யநைமித்திக கர்மங்களைப் பலன்களில் அபிஸந்தியின்றிப் பக்தியோகத்தின் அபிவ்ருத்திக்காக அனுஷ்டிக்கவேண்டும்.) ஒன்றும் தெரியாத மூடன் இந்த்ரியங்களை அடக்கியாளமுடியாமல் வேதங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களை அனுஷ்டிக்காமல் நிஷித்த கர்மங்களையும் நடத்திக்கொண்டு வருவானாயின், அவன் வேதவிருத்த கர்மங்களை அனுஷ்டிக்கையும் வேதங்களில் விதித்த கர்மங்களை அனுஷ்டிக்காமையுமாகிற அதர்மங்களால் ம்ருத்யுவினிடத்தினின்று ம்ருத்யுவைப் பெறுவான். ஆகையால் வேதங்களில் விதிக்கப்பட்ட நித்யம் நைமித்திகம் காம்யம் என்கிற மூன்றுவகைக் கர்மங்களையும் ஈச்வரார்ப்பணமென்னும் புத்தியுடன் அனுஷ்டித்துக்கொண்டே அந்தந்த அவாந்தர பலன்களில் மனப்பற்றின்றி யிருப்பானாயின் நைஷ்கர்ம்ய ஹேதுவான (ஸம்ஸாரபந்த ஹேதுவான ஸகலகர்மங்களின நிவ்ருத்திக்கு ஹேதுவான) ஜ்ஞானஸித்தியைப் பெறுவான்' கர்ம

யோகம் ஜ்ஞானயோகத்திற்கு ஹேது. ஆனால் யஜ்ஞாதிகர்மங்களுக்கு வெவ்வேறு பலன்கள் ஏன் கூறப்பட்டிருக்கின்றன. வென்றால், அது உண்மையன்று; அர்த்தவாதமே. ஸம்ஸாரிகளுக்கு அவற்றில் முயற்சி உண்டாகும்பொருட்டு வேதங்கள் வேறு பலன்களைக் கூறுகின்றனவேயன்றி அவற்றிற்கு அதில் கருத்தில்லை. எவன் ஹ்ருதயக்ரந்தியை (அஹங்கார மமகாராதி ரூபமான ப்ரக்ருதிஸம்பந்தகார்யத்தைச்) சீக்ரத்தில் போக்கிக்கொள்ள விரும்புகிறானோ, அவன் தாந்த்ரிகமான (பஞ்சராத்ர தந்த்ரங்களில் சொல்லப்பட்ட) கர்மத்தினாலும் விதிப்படி பகவானை ஆராதிக்கவேண்டும். (தாந்த்ரிகம் வைதிகம் என்று இருவகையான கர்மயோகத்தினாலும் பகவானை ஆராதித்துக்கொண்டு வருவானாயின், சீக்ரத்தில் பக்தியோகம் கைகூடப்பெற்று ப்ரக்ருதிஸம்பந்தத்தினின்று விடுபடுவான். ஆசார்யனிடத்தினின்று அனுக்ரஹம் பெற்று அவ்வாசார்யனால் பகவானை ஆராதிக்கவேண்டிய விதங்களெல்லாம் கற்பிக்கப்பெற்றுத் தனக்கு இஷ்டமான மூர்த்தியுடன் கூடின பரமபுருஷனை ஆராதிக்கவேண்டும். அந்தப் பரமபுருஷனுக்கு எதிரே உட்கார்ந்து ப்ராணாயாமம் பூதசுத்தி முதலியவைகளால் தேஹத்தைச் சுத்திசெய்து சிறந்த அங்கந்யாஸங்களாலும் கரந்யாஸங்களாலும் ரக்ஷை பண்ணிக்கொண்டு அப்பரம புருஷனை ஆராதிக்கவேண்டும். அர்ச்சாவிக்ரஹம் முதலியவற்றிலாவது ஹ்ருதயத்திலாவது பகவானைத் தனக்குக் கிடைத்த பூஜாத்ரவ்யங்களால் ஆராதிக்கவேண்டும். முதலில் துளஸி சந்தனம் புஷ்பம் முதலிய பூஜாத்ரவ்யங்களை ப்ரோக்ஷணாதிகளாலும் பூமியை விளக்குவது மெழுகுவது முதலியவைகளாலும்

தேஹத்தை அங்கந்யாஸாதிகளாலும் பகவானுடைய மூர்த்தியை ஜலம் சேர்த்து அலம்புவது முதலியவைகளாலும் ஸம்ஸ்கரித்து ஸித்தப்படுத்திக்கொண்டு அனந்தரம் ஆராதனத்திற்குத் தொடங்கவேண்டும். பாத்யபாத்ரம் முதலிய பாத்ரங்களை ஸ்தாபித்து மனஆக்கதுடன் மூர்த்தியில் பகவானை ஆவாஹனஞ்செய்து ஹ்ருதயம் முதலிய அங்கங்களில் ஹ்ருதயாதி மந்த்ரங்களாலும் மூலமந்த்ரத்தினாலும் ந்யாஸம்பண்ணிக்கொண்டு மூலமந்த்ரத்தினால் பகவானை ஆராதிக்கவேண்டும். ஹ்ருத்யம் முதலிய அங்கங்களோடும் ஸுதர்சனசக்ரம் முதலிய உபாங்கங்களோடும் பரிவாரங்களோடும் கூடிய பகவானுடைய அந்தந்த மூர்த்தியை அந்தந்த மந்த்ரங்களால் பாத்யம் அர்க்யம் ஆசமனீயம் முதலியனவும் ஸ்னானம் வஸ்த்ரம் பூஷணம் முதலியனவும் ஸமர்ப்பித்துப் பூஜிக்கவேண்டும். கந்தம் புஷ்பம் அக்ஷதை மாலை தூபம் தீபம் (மதுபர்க்கம்) நைவேத்யம் இவை முதலிய உபசாரங்களால் பரிவாரங்களோடு கூடின பகவானை விதிப்படி ஆராதித்து ஸ்தோத்ரங்களால் துதித்து நமஸ்காரம் செய்யவேண்டும். தன்னை அந்தப் பகவன்மயமாகவே தியானித்துக்கொண்டு அப்பகவானுடைய மூர்த்தியை ஆராதிக்கவேண்டும். பகவானுக்கு அமுதுசெய்யப்பண்ணின அன்னத்தைப் போஜனத்திற்காக ஸ்வீகரித்துத் துளஸிபுஷ்பம் முதலியவற்றைச் சிரஸ்ஸில் தரித்து மூர்த்தியில் ஆவாஹனஞ் செய்யப்பெற்ற பகவானைப் பரமபதம் முதலிய அவன் ஸ்தானத்தில் ஸுகமாக எழுந்தருளியிருக்குமாறு உத்வாஸனஞ் செய்து பூஜையை முடிக்கவேண்டும். அக்னி ஸூர்யன் ஜலம் முதலிய இடங்களி

லும் * அதிதியிடத்திலும் ஹ்ருதயத்திலுமுள்ள ஸர்வாந்தராத்மாவான ஸர்வேஶ்வரனை இவ்வண்ணம் எவன் ஆராதிக்கிறானோ, அவன் சீக்ரத்தில் ஸம்ஸாரத்தினின்று விடுபடுவான். மூன்றாவது அத்யாயம் முற்றிற்று.

விதேஹ மன்னவன் பகவானுடைய அவதார வ்ருத்தாந்தங்களைப் பற்றி வினவுதலும் த்ரமிலன் அதற்கு மறுமொழி கூறுதலும்.

மன்னவன் சொல்லுகிறான்:—பகவான் தன் ஸங்கல்பத்தினால் எந்தெந்த அவதாரங்களால் எந்தெந்த கார்யங்களைச் செய்தானோ, செய்கிறானோ, செய்யப்போகிறானோ, அந்தந்த அவதாரங்களையும் அந்தந்த அவதார சேஷ்டிதங்களையும் எமக்குச் சொல்வீர்களாக.

த்ரமிலன் சொல்லுகிறான்:—அளவிடமுடியாத ஸ்வரூபஸ்வபாவங்களையுடைய பகவானுடைய குணங்களை எவன் கணக்கெண்ண விரும்புகிறானோ, அவன் பாலபுத்தியுடையவனேயாவான். ஏனென்றால், நெடுங்காலமாக மிகவும் ப்ரயத்னப்பட்டுப் பூமியிலுள்ள தூள்களை எண்ணினாலும் எண்ணக்கூடும். பலவகைப்பட்ட விசித்ர சக்திகள் அமைந்த பகவானுடைய குணங்களையோவென்றால், ஒருகாலும் எண்ண முடியாது. ஆதிதேவனாகிய நாராயணன் தான் படைத்த ப்ருதிவி முதலிய பஞ்சபூதங்களால் ப்ரஹ்மாண்டமாகிற பட்டணத்தைப் படைத்து அதில் தன்னுடைய அம்சத்தினால் ப்ரவேசித்து அப்பொழுது புருஷனென்னும் பெயர் பெற்றான். இதை வைராஜபுருஷாவதாரமென்பர்கள். இதுவே அவதாரங்களுக்குள் முதலவதாரம். இந்த வைராஜ

---

* அதிதி—விருந்தாளி.

புருஷன் மூன்று லோகங்களும் பாதம் முதலிய அவயவங்களாகப்பெற்ற தேஹமுடையவன். இவனுடைய இந்த்ரியங்களால் வ்யஷ்டி ஜீவர்களென்றும் ஸமஷ்டி ஜீவர்களென்றும் வழங்கிவருகிற இருவகைப்பட்ட ஜீவர்களுடைய இருவகை இந்த்ரியங்களும் உண்டாயின. இவனுடைய ஜ்ஞானம் இந்த்ரியங்களின் மூலமாய் அறியவேண்டிய நிர்ப்பந்தமின்றி எல்லாவற்றையும் ஸ்வயமாகவே ஸாக்ஷாத்கரிக்குந்திறமையுடையது. இவனுடைய ஶ்வாஸவாயுவினிடத்தினின்றே ப்ராணிகளின் பலமென்கிற தாரண ஸாமர்த்யமும் ஓஜஸ்ஸென்கிற ப்ரவ்ருத்தி ஸாமர்த்யமும் ஈஹையென்கிற சேஷ்டையும் உண்டாகின்றன. அத்தகையனான இவ்வைராஜபுருஷனே ஸத்வம் ரஜஸ்ஸு தமஸ்ஸென்கிற ப்ரக்ருதியின் குணங்களால் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு ஆதிகர்த்தாவாயிருக்கின்றான் (உபாதான காரணமும் நிமித்தகாரணமுமாயிருக்கின்றான்). பகவான் ஜகத்தைப் படைக்கும்பொருட்டு முதலில் ரஜோகுணத்துடன்கூடி ப்ரஹ்மதேவனாயிருந்தான் (ரஜோகுணம் தலையெடுத்த ப்ரஹ்மதேவனென்னும் ஜீவனிடத்தில் அநுப்ரவேசித்து அவனைச் சரீரமாகக் கொண்டு அவனேயென்னும்படி அமைந்திருந்தான்.) ஜகத்தின் ஸம்ஹாரத்திற்காகத் தமோகுணத்துடன் கூடி ருத்ரனாயிருந்தான். (ஸம்ஹாரகாலத்தில் ரஜோகுணம் தலையெடுத்த ருத்ரனென்னும் ஜீவனிடத்தில் அநுப்ரவேசித்து அவனைச் சரீரமாகக் கொண்டு அவனேயென்னும்படி அமைந்திருந்தான்.) ஜகத்தைப் பாதுகாக்கும்பொருட்டு ஸத்வகுணத்துடன்கூடித் தானே விஷ்ணுவாய் அவதரித்தான். அப்பரமபுருஷன் யஜ்ஞங்களுக்கு நிர்வாஹகன். அவ்விஷ்ணு ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்

யர்களென்கிற மூன்று வர்ணத்தவர்களின தர்மங்களுக்கு அணைபோன்றிருந்தான். இங்ஙனம் அவன் ஜகத்திற்கு உபாதானகாரணமாயிருக்கிறான்; அத்தகைய பரமபுருஷனிடத்தினின்று ப்ரஜைகளின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் உண்டாகின்றன. மற்றும் அப்பரமபுருஷன் தர்மனுடைய பார்யையும் தக்ஷருடைய புதல்வியுமாகிய மூர்த்தியென்பவளிடத்தில் நரனென்றும் நாராயணனென்றும் இரண்டு உருவங்களுடன் அவதரித்து ஸம்ஸாரபந்தத்திற்கு ஹேதுவான ஸமஸ்த கர்மங்களின் நிவ்ருத்தியை விளைவிப்பதாகிய ஜ்ஞானயோகத்தை நாரதாதிகளுக்கு உபதேசித்தான்; நரநாராயணரூபியான அப்பரமபுருஷன் இப்பொழுதும் நாரதர் முதலிய ரிஷிஶ்ரேஷ்டர்களால் பணியப்பட்ட பாதாரவிந்தங்களுடையவனாகிப் பதரிகாஶ்ரமத்தில் இருக்கின்றான். இந்த்ரன் பதரிகாஶ்ரமத்தில் தவஞ்செய்கின்ற நாராயணனைக் கண்டு 'இவன் தவத்தினால் என் ஸ்தானத்தைப் பெற விரும்புகிறான்' என்று பயந்து அவனுடைய தவத்தை அழிக்கும்பொருட்டு மன்மதனை அவனுடைய பரிவாரங்களுடன் அனுப்பினான். அம்மன்மதன் அப்ஸரஸ்த்ரீகளின் கூட்டங்களோடும் வஸந்தருதுவோடும் மந்தமாருதத்தோடும் (பசுந்தென்னலோடும்) பதரியென்று ப்ரஸித்தமான அப்பகவானுடைய ஆஶ்ரமத்திற்குச் சென்று அவனுடைய மஹிமையை அறியாதவனாகையால் ஸ்த்ரீகளின் கடைக்கண்ணோக்கங்களாகிற பாணங்களால் அவனை அடித்தான். ஆதிதேவனாகிய நாராயணன் இந்த்ரன் செய்த அவ்வக்ரமத்தை அறிந்து ஜிதேந்த்ரியனென்னும் கர்வமின்றிச் சிரித்து நடுங்குகின்ற அம்மன்மதன் முதலியவர்களைக் குறித்து 'ஓ மன்மத! ஓ மந்தமாருத!

ஓ அப்ஸரமடந்தையர்களே! நீங்கள் பயப்படவேண்டாம். நான் செய்யும் அதிதிஸத்காரத்தைப் பெற்றுக்கொள்வீர்களாக. இந்த என்னுஶ்ரமத்தைச் சூன்யமாகாதபடி செய்வீர்களாக. (அதிதிகளில்லாத ஆஶ்ரமம் சூன்யமேயல்லவா?)' என்றான்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—மன்னவனே! அபயங்கொடுப்பவனாகிய ஸ்ரீமந்நாராயணன் இங்ஙனம் மொழிகையில் மன்மதன் முதலிய தேவதைகள் வெட்கத்தினால் தலை வணக்கமுற்று மன இரக்கத்துடன் மேல்வருமாறு மொழிந்தார்கள்.

காமாதிகள் சொல்லுகிறார்கள்:—நாங்கள் அபராதஞ் செய்திருப்பினும் நீ எங்களிடத்தில் இங்ஙனம் அனுக்ரஹம் செய்வதென்னும் இது ஆச்சர்யமன்று. ஏனென்றால், நீ காமம் க்ரோதம் முதலிய விகாரங்களற்றவன்; ஹேயங்களுக்கிடமான ப்ரக்ருதி புருஷர்களைக் காட்டிலும் விலக்ஷணமாயிருப்பவன்; ஆத்ம ஸாக்ஷாத்காரஞ் செய்து அவ்வாத்மானுபவத்தினால் ஸந்தோஷமுற்ற ஜிதேந்த்ரியர்கள் வந்து பணியப்பெற்ற பாதாரவிந்தங்களுடையவன். (உன் பக்தர்களுக்கே காமாதி விகாரங்கள் உண்டாகிறதில்லையென்றால், உனக்கு அவை எங்ஙனம் உண்டாம்?) உன்னைப் பணிந்து அதனால் ஸ்வர்க்காதிலோகங்களைக் கடந்து பரமபதத்தை அடைபவர்களாகிய உன் பக்தர்களுக்கு இந்த்ராதி தேவதைகளால் பற்பல விக்னங்களும் உண்டாவது வழக்கமே. (ஏனென்றால் 'இவர்கள் நம்மைக் கடந்து நமக்கும் கிடைக்க அரிதான பரமபதத்திற்குப் போகிறார்கள்' என்னும் பொறாமையினால் இந்த்ராதிதேவதைகள் உன் பக்தர்களுக்கு விக்னங்களைச் செய்கின்றார்கள்.) உன்னைப் பணியாத மற்றவனோவென்றால், பயிரிடுங் குடிகள்

அரசனுக்குக் கப்பங்கொடுப்பதுபோல யஜ்ஞத்தில் இந்த்ராதி தேவதைகளுக்குப் புரோடாசம் முதலிய அவரவர் ஹவிர்ப்பாகங்களைக் கொடுக்கிறுனைகயால் அவனுக்கு அவர்களால் விக்னங்கள் எவையும் நேரிடு கிறதில்லை. ஆனல் உன் பக்தனுக்கு விக்னங்கள் நேரிடி னும் நீ அவனுக்கு ரக்ஷகனயிருக்கின்றனேயாகையால் அவன் அந்த விக்னங்களின்தலைமேல் அடிவைத்து நடக்கிறுன். இப்படியானபின்பு உனக்கு விக்னங்களென் கிற சங்கைக்கும் இடம் உண்டோ? சிலர் பசி தாஹங் களையும் குளிர் வெய்யில் மழை காற்று ப்ராணன் நாக் கின் போகங்கள் சிஶ்னத்தின் போகங்கள் இவைகளை யும் தவத்திற்கு விக்னம் செய்கையால் கரையற்ற கடல் போல் கடக்கமுடியாத எங்களையும் கடந்தும் கடைசி யில் பயனற்ற கோபத்திற்கு உட்பட்டுக் குளப்படியில் முழுகுகிறுர்கள்; வருந்தியும் அனுஷ்டிக்க முடியாத தவத்தையும் சாபாதிகளால் அழித்துக்கொள்கிறுர் கள். (உன்னிடத்தில் பக்தி இல்லாமல் வெறுமனே தவஞ் செய்கிறவர்களுக்கு இரண்டு வழிகள் ஏற்பட்டிருக்கின் றன. அவர்கள் எங்களுக்காவது கோபத்திற்காவது உட்படுகிறுர்கள். அதில் எங்களுக்கு உட்படுகிறவர்கள் காமபோகங்களையாயினும் அனுபவிக்கிறுர்கள். கோ பத்திற்கு உட்படுகிறவர்களோவென்றல், மிகவும் மந்த புத்தியர்களே. ஏனென்றல் அவர்கள் போகமோக்ஷங் களிரண்டுமின்றி வீணுகக் கோபத்திற்குட்பட்டுச் சா பங்கொடுப்பது முதலியன செய்து அருந்தவத்தை யெல்லாம் அழித்துக்கொள்கிறுர்கள்.)

த்ரமிலன் சொல்லுகிறுன்:—அந்தக் காமன் முத லியவர் இங்ஙனம் சொல்லிக்கொண்டிருக்கையில் அவர் களுடைய லாவண்யாதி கர்வத்தை அழிக்கவிரும்பித்

திறமைகள் அமைந்த பகவான் மிகவும் அற்புதமான காட்சியுடையவர்களும் நன்கு அலங்கரித்துக்கொண்டு தனக்குச் சுஶ்ரூஷை செய்பவர்களுமாகிய சில மடந்தையர்மணிகளை அவர்களுக்குக் காண்பித்தான். தேவதைகளின் பணிக்காரர்களான அந்தக் காமாதிகள் அழகிய உருவங்கொண்ட ஸ்ரீமஹாலக்ஷ்மிகள்போன்ற அம்மடந்தையர்மணிகளைக் கண்டு அவர்களுடைய ரூபஸௌஷ்டவத்தினால் தங்கள் ஒளி மழுங்கப்பெற்று அவர்களுடைய மேனியின் மணத்தை மோந்து மதிமயங்கினார்கள். தேவர்களுக்குத் தேவனான ப்ரஹ்மதேவனுக்கும் நியாமகனான அந்த நாராயணன் மன்மதன் முதலியவர்களைக் கண்டு 'இம்மடந்தையர்களுக்குள் உங்களோடொத்த உருவமுடைய ஒருத்தியை அழைத்துக்கொண்டு போவீர்களாக. 'எல்லாரும் எங்களுக்கு மேற்பட்டவர்களேயொழிய எங்களோடொத்தவள் ஒருத்தியும் இல்லையே' என்கிறீர்களா? ஆயினும் ஒருத்தியை அழைத்துக்கொண்டு போவீர்களாயின், அவள் உங்கள்ஸ்வர்க்கத்திற்கெல்லாம் அலங்காரமாயிருப்பாள்' என்றான். அந்தத் தேவப்ருத்யர்கள் அப்படியேயென்று பகவானுடைய ஆஜ்ஞையை அங்கீகரித்து அவனை நமஸ்கரித்து அப்ஸரமடந்தையர்களில் சிறந்த ஊர்வசியென்னும் ப்ரஸித்திபெற்ற ஒருமடந்தையர்மணியை அழைத்து அவளை முன்னிட்டுக்கொண்டு தேவலோகம் போய்ச்சேர்ந்து தேவஸபையில் இந்திரனுக்கு நமஸ்காரஞ்செய்து தேவர்கள் அனைவரும் கேட்டுக்கொண்டிருக்கையில் நாராயணனுடைய பலத்தை மொழிந்தார்கள். இந்திரன் அதைக் கேட்டு வியப்புற்றுப் பயந்தான். தன்னைப் பற்றினவர்களைக் கைவிடாது காக்குந்தன்மையனும் எங்கும் நிறைந்த

வனுமாகிய அப்பகவான் ஹம்ஸரூபியாகவும் தத்தாத்ரேயராகவும் ஸனகாதிமஹர்ஷிகளாகவும் எங்கள் தந்தையும் மஹானுபாவனுமாகிய ரிஷபனாகவும் ஜகத்தின் க்ஷேமத்திற்காகத் தன் அம்சத்தினால் அவதரித்து ஜீவாத்ம பரமாத்மாக்களின் உண்மையை அறிவிக்கவல்ல ஜ்ஞானயோகத்தை உபதேசித்தான். அவ்விஷ்ணுவே ஹயக்ரீவனாய் அவதரித்து வேதங்களைப் பறித்துக் கொண்டுபோன மதுவென்னும் அஸுரனைக் கொன்று அவ்வேதங்களை மீட்டுக்கொண்டு வந்தான். மற்றும், இப்பரமபுருஷன் மத்ஸ்யாவதாரஞ் செய்து ஸத்யவ்ரதனென்னும் மனுவையும் பூமியையும் ஓஷதிகளையும் ரிஷிகளையும் ரக்ஷித்தான். வராஹாவதாரஞ் செய்து ப்ரளய ஜலத்தினின்று பூமியை மேலுக்குக் கொண்டு வருகின்ற இம்மஹாவிஷ்ணு ஹிரண்யாக்ஷனை முடித்தான். மற்றும், இவன் கூர்மாவதாரஞ்செய்து அமிருதம் கடைவதற்காக மந்தரபர்வதத்தைத் தன் முதுகில் தரித்தான். மற்றும். இவன் முதலையிடம் அகப்பட்டு வருந்தித் தன்னைச் சரணம் அடைந்த கஜேந்திரனை அம்முதலையிடத்தினின்று விடுவித்தான். வாலகில்யரென்னும் ரிஷிகள் கஶ்யபர்க்காக ஸமித்துக் கொண்டு வரும்பொழுது மிகவும் அற்பசரீரர்களும் தவத்தினால் இளைத்தவர்களுமாயிருக்கையால் குளப்படியைக் கடந்து வரமுடியாமல் அதில் மூழ்கி இந்திரனால் பரிஹாஸஞ் செய்யப்பெற்றுத் தன்னைத் துதிக்கையில் இப்பரமபுருஷன் அவர்களை அவ்வாபத்தினின்று விடுவித்தான். ப்ரஹ்மஹத்யையில் அகப்பட்டுக்கொண்ட அவ்விந்திரனையும் அதினின்று விடுவித்தான். மற்றும், ஹிரண்யகசிபுவின் க்ருஹத்தில் அடைப்புண்டு அநாதைகளாயிருந்த தேவஸ்த்ரீகளை அவ்வாபத்தினின்று விடு

வித்தான். மற்றும், இவன் நரசிங்கமாய் அவதரித்து ஸாதுக்களுக்கு அபயங்கொடுக்க முயன்று அஸுரஸ்ரேஷ்டனாகிய ஹிரண்யகசிபுவைக் கொன்றான். மற்றும், இப்பரமபுருஷன் தேவாஸுரயுத்தத்தில் இந்த்ராதிதேவதைகளுக்கு உபகாரஞ் செய்யமுயன்று அஸுரஸ்ரேஷ்டர்களை வதித்தான். மற்றும், மன்வந்தரங்களனைத்திலும் தன்னுடைய அவதாரங்களால் உலகங்களைப் பாதுகாத்தான். வாமனனாய் அவதரித்து யாசிக்கிற வியாஜத்தினால் பலிசக்ரவர்த்தியிடத்தினின்று பூமியைப் பறித்து அதிதியின் பிள்ளைகளான இந்திரன் முதலிய தேவதைகளுக்குக் கொடுத்தான். ஹைஹயர்களின் குலத்திற்குத் தூமகேதுவாகிய பாசுராமனாய் அவதரித்து இருபத்தொருதடவைகள் க்ஷத்ரியர்களை வதித்துப் பூமியில் க்ஷத்ரியப்பூண்டே இல்லாதபடி செய்தான். மற்றும், அவ்விஷ்ணு ஸீதாபதியாகிய ஸ்ரீராமனாய் அவதரித்து உலகங்களின் பாபங்களைப் போக்கவல்ல புகழ்களுடையவனாகி ஸமுத்ரத்தில் ஸேதுவைக் கட்டி இராவணனையும் இலங்கையிலுள்ள மற்ற அரக்கர்களையும் வதித்து இப்பொழுது விளக்கமுற்றிருக்கின்றான். கர்மத்தினால் விளையும் பிறவியற்ற இம்மஹாபுருஷன் பூமியின் பாரத்தை நீக்கும்பொருட்டு யதுவம்சத்தில் அவதரித்துத் தேவதைகளாலும் செய்யமுடியாத செயல்களை நடத்தப்போகிறான். மற்றும், இவன் புத்தாவதாரஞ் செய்து யஜ்ஞஞ் செய்யத்தகாதவர்களாயிருந்தும் தங்கள் நிலைமையைக் கடந்து யஜ்ஞஞ் செய்கின்ற தைத்யர்களை வேதசாஸ்த்ரத்திற்கிணங்காத வீண்வாதங்களால் மதிமயங்கும்படி செய்யப்போகிறான். மற்றும், கலியுகத்தின் கடைசியில் (கல்கியவதாரஞ் செய்து) பூமியைக் கைப்பற்றியாள்கின்ற சூத்ரர்களை

வதிக்கப்போகிறான். நீண்ட புஜதண்டங்களையுடையவனே! ஜகத்திற்கெல்லாம் ப்ரபுவான பரமபுருஷனுடைய செயல்களையும் அவதாரங்களையும் உனக்கு நிரூபித்துச் சொன்னேன். இத்தகைய செயல்களும் அவதாரங்களும் அளவற்றவை. அவற்றிற்கு எல்லையே கிடையாது. நான்காவது அத்யாயம் முற்றிற்று.

பகவானிடத்தில் பக்தியில்லாதவர்களின் கதி எத்தகையதென்றும் யுகங்கள்தோறும் பகவானை எவ்வண்ணம் ஆராதிக்கவேண்டுமென்றும் அரசன் வினவினதற்குச் சமஸன் மறுமொழி கூறுதல்.

மன்னவன்சொல்லுகிறான்:—ஆத்மவித்தமர்களே! (ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்தவர்களில் சிறந்தவர்களே!) இவ்வுலகத்தில் ப்ராணிகள் தன்னைப்பற்றினவர்களின் ஸம்ஸாரபந்தத்தைப் போக்கவல்ல மஹானுபாவனாகிய பகவானைப் பெரும்பாலும் பணிகிறதில்லை. இந்த்ரியங்களை வெல்லமுடியாமையால் விருப்பங்கள் ஓயப்பெறாமல் அவற்றைப் பெறுதற்காகவே அலைகின்றார்கள். அவர்களுடைய நிஷ்டை எத்தகையது? (அவர்களுக்கு எதில் ஆஸக்தி? எது ப்ராப்யம்? அதற்குக் காரணம் என்ன? இதை விவரித்து மொழிவீர்களாக.)

சமஸன் சொல்லுகிறான்:—நான்முகனைச் சரீரமாகவுடைய பகவானுடைய முகம் புஜம் துடை பாதம் இவற்றினின்று ப்ராஹ்மணர் க்ஷத்ரியர் வைஶ்யர் ஶூத்ரர் என்கிற நான்கு வர்ணத்தவர்களும் ஸத்வாதி குணங்களோடுகூடி ப்ரஹ்மசர்யாதி ஆஶ்ரமங்களுடன் தனித்தனியே உண்டானார்கள். நான்குவர்ணங்களாகவும்

நான்கு ஆஶ்ரமங்களாகவும் பிரிந்திருக்கிற இந்த ப்ராணிகளுக்குள் தங்களுக்கு ஸாக்ஷாத்காரணனும் ஸர்வநியாமகனுமாகிய பரமபுருஷனை எவர்கள் பணிகிறதில்லையோ, மற்றும் அவமதிக்கிறார்களோ, (தேவதாந்தரங்களோடு ஸமமாக நினைக்கிறார்களோ), அவர்கள் வர்ணாஶ்ரமங்களினின்று நழுவி நரகத்தில் விழுகிறார்கள். (ஈஶ்வரன் தன்னைப் பணிந்து உஜ்ஜீவிக்கும்படி ஆத்மாக்களுக்குக் கரணகளேபரங்களை அளிக்க, அவற்றைக்கொண்டு அவனைப் பணியாமல் அவனை அவமதிக்கிறவர்கள் க்ருதக்னர்களேயல்லவா? பரமபுருஷன் தங்களுக்குக் காரணனென்றும் அவன் ஸர்வநியாமகனென்றும் ஸர்வஸ்மாத்பரனென்றும் அறிவு நேரப்பெற்றும் அவனைப் பணியாதவர்கள் க்ருதக்னர்களேயாகையால் அவர்கள் நரகத்தில் விழுகிறார்களென்பது ஸத்யமே. அத்தகைய அறிவில்லாத கேவல மூடர்களின் கதி என்னென்றால், சொல்லுகிறேன்). பகவானுடைய கதைகளைக் கேட்பதும் அவனுடைய குணங்களைக் கீர்த்தனஞ் செய்வதுமாகிய இவற்றிற்கு வெகு தூரத்திலிருக்கிற ஸ்த்ரீகளும் ஶூத்ராதிகளும் உங்களைப்போன்ற பாகவதர்களால் தயை செய்யத் தகுந்தவர்களே. (இவர்களும் பாகவதர்களின் க்ருபைக்கு விஷயமாகி ஸம்ஸாரபந்தத்தினின்று விடுபடுகிறார்கள்.) ப்ராஹ்மணர் க்ஷத்ரியர் வைஶ்யர் என்கிற மூன்று வர்ணத்தவர்களும் வேதாதிகாரமுடையவர்களாகையால் தத்வஜ்ஞானம் பெற்றுப் பகவானுடைய பாதாரவிந்தங்களை அடைவதற்கு உரியவர்களாயிருந்தும் வேதங்களில் சொல்லுகிற அர்த்தவாதங்களில் மனம் சென்று ஸ்வர்க்கம் முதலிய பலன்களை விரும்பி அவற்றிற்காக முயற்சி செய்கிறார்களன்றிப் பகவானுடைய பாதாரவிந்

தங்களைப் பணிகிறதில்லை. ஸம்ஸாரபந்தத்திற்கிடமா காத கர்மமே கர்மமென்கிற கர்மத்தினுண்மையை அறியாதவர்களும் அதை யறிந்த பெரியோர்களைப் பணிந்து கேட்டுத் தெரிந்துகொள்வதற்குரிய வணக்க மற்றவர்களும் மூர்க்கர்களுமாயிருந்தும் தங்களைப் பெரிய பண்டிதர்களாக நினைத்துக்கொண்டு செவிக்கினியவைகளான அர்த்தவாதவாக்யங்களால் மதி மயங்கி ‘அப்ஸரமடந்தையர்களோடு கலந்து விளையாடப்போகிறோம்’ என்னும் இவை முதலிய * சாடு வாக்யங்களைப் பிதற்றுகிறார்கள்; ரஜோகுணத்தினால் கோரமான அபிசாராதிஸங்கல்பமுடையவர்களும் ஸ்வர்க்காதி போகங்களில் விருப்பமுற்றவர்களும் ஸர்ப்பம்போல் கோபமுறுந்தன்மையர்களும் தூரஹங்காரிகளுமாகி அச்சுதனுக்கன்பர்களான பெரியோர்களைப் பரிஹஸிக்கின்றார்கள். அத்தகைய மூடர்கள் ஸ்த்ரீகளைப் பணியுந் தன்மையர்களா யிருப்பார்களன்றிப் பெரியோர்களை அடுத்துப் பணியமாட்டார்கள்; ஆணும்பெண்ணுமாய்க் கலந்தனுபவிக்கும் ஸௌகத்தையே முக்யமாகவுடைய இல்லறவாழ்க்கையில் இருந்து ஒருவர்க்கொருவர் ஆசீர்வாதங்களைச் செய்கிறார்கள்; லோபத்தினால் அன்னதானம் வஸ்த்ரதானம் இவை செய்யாமலும் தக்ஷிணைகள் கொடாமலும் கேவலம் ஜம்பத்திற்காக யாகஞ் செய்கிறார்கள்; ஜீவனத்திற்காகப் பசுக்களை ஹிம்ஸிக்கிறார்கள்; அது ஹிம்ஸையென்று சிறிதும் ஆராய்ந்தறியமாட்டார்கள். துஷ்டர்கள், பணம் முதலியன அமைந்திருக்கையாகிற ஸம்பத்து க்ராமாதிபத்யம் முதலிய ஐஶ்வர்யம் நற்குலத்தில் பிறத்தல் கல்வி கொடை

* சாடுவாக்யம்—இனிய வசனங்கள். பொருளில்லாமற் போயினும் செவிக்கினிமையாயிருக்கை.

அழகிய உருவம் அமைந்திருத்தல் தேஹபலம் ஶ்ரௌ தஸ்மார்த்த கர்மானுஷ்ட்டானம் ஆகிய இவைகளால் கர்வமுண்டாகப்பெற்று அதனால் மதிமயங்கி ஈஶ்வரனையும், அவனுடைய ஸ்வரூப ஸ்வபாவாதிகளை உள்ளபடி அறிந்து அவனிடத்தில் நிலைநின்ற மனமுடையவர்களும் அவனுக்கன்பர்களுமான பெரியோர்களையும் அவமதிக்கின்றார்கள். இங்ஙனம் இருக்கின்ற அவர்கள் ஸமஸ்த ஆத்மாக்களிடத்திலும் அந்தராத்மாவாய் அமைந்து அவர்களுக்கு நியாமகனாயிருப்பவனும் ஆகாசம்போல் அவர்களுடைய தோஷம் தீண்டப் பெறாமல் பரிசுத்தனும் சிறந்த புருஷார்த்தஸ்வரூபனும் வேதாந்தங்களால் அறியக்கூடிய ஸ்வரூப ஸ்வபாவங்களை யுடையவனுமாகிய ஈஶ்வரனைப் பெரியோர்களிடத்தில் கேட்கிறதில்லை. ஆகையால் அவர்கள் வேதத்தினுடைய தத்வார்த்தத்தை அறிந்தவர்களல்லர். பின்னையோவென்றால், தங்கள் மனோரதங்களைப் பற்றின பேச்சுக்களைப் பேசிக்கொண்டு பொழுது போக்குகிறார்கள். ஏனென்றால், அவர்கள் ஒன்றுமறியாத மூடர்களல்லவா? (ஸந்தானத்திற்காக விவாஹஞ் செய்துகொள்ள வேண்டுமென்றும், ருதுகாலத்தில் மனைவியைப் புணர வேண்டுமென்றும், யாகத்திற்காகப் பசுவை வதிக்க வேண்டுமென்றும், ப்ரதிக்ரஹம் முதலியவற்றால் பணம் ஸம்பாதிக்கவேண்டுமென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றனவாகையால் அதன்படி நடக்கிறவர்களை எங்ஙனம் பழிக்கலாமென்றால், சொல்லுகிறேன், கேள்.) உலகத்தில் ஸ்த்ரீகளைப் புணர்தல் மாம்ஸம் புசித்தல் மத்யபானம் செய்தல் ஆகிய இவை ப்ராணிகளுக்கு ராகத்தினால் நித்யமாய் ப்ராப்தங்களாயிருக்கின்றன. ஆகையால் சாஸ்த்ரங்கள் அவற்றைச் செய்யவேண்டு

மென்று விதிக்கிறதில்லை. பின்னையோ வென்றால், நிய மிக்கின்றன. (ஸ்த்ரீகளை நினைத்தபடி புணரலாகாது. விதிப்படி மணம்புரிந்து அவளையே புணரவேண்டும். அதிலும் ருதுகாலம் தவிர மற்றகாலங்களில் புணரலா காது. யாகந்தவிர மற்ற காலங்களில் மாம்ஸத்தைப் புசிக்கலாகாது; மத்யபானமும் செய்யலாகாது. என்று நியமிக்கின்றன). ஸ்த்ரீ ஸம்போகம் மாம்ஸபோஜனம் மத்யாபானம் ஆகிய இவற்றினின்று மீண்டிருக்கையே சாஸ்த்ரத்திற்கு ப்ரியமாயிருக்கும். (ஆனால் மனைவி யைப் புணர்தல் யாகத்தில் மாம்ஸத்தைப் புசித்தல் மத் யபானஞ் செய்தல் ஆகிய இவற்றை நிந்திக்கலாமோ வென்றால், அவற்றின் உபயோகத்தை அறியாமல் கேவ லம் தேஹ ஸுகத்திற்காகவே உபயோகப்படுத்துவார் களாயின் அவை நிந்திக்கத் தக்கவைகளேயாம்). தனத் திற்குத் தர்மானுஷ்டானமே பலன். (ப்ரதிக்ரஹம் முதலியவற்றால் ஸம்பாதித்த பணத்தைக் கொண்டு பக வானுடைய ஆராதனரூபமான தர்மங்களை அனுஷ் டிக்கவேண்டுமன்றி அதை வேறுவிதமாக உபயோகப் படுத்தலாகாது.) தர்மானுஷ்டானத்தினால் சேதனு சேதனங்களின் உண்மையைப் பற்றின அறிவும் பகவா னுடைய உண்மையைப் பற்றின அறிவும் உண்டாகும். அந்த ஜ்ஞானத்தினால் பசி தாஹம் முதலிய ஊர்மிகள் தீண்டப் பெறுமையாகிய சாந்தியும் உண்டாகும். சிலர் இங்ஙனம் ஜ்ஞானத்திற்கிடமான தர்மானுஷ்டானத் தையே ப்ரயோஜனமாகவுடைய தனத்தின் உபயோ கத்தை அறியாமல் விஷயபோகத்திற்காக உபயோகப் படுத்துகிறார்கள். அவர்கள் தேஹத்திற்கு எவ்விதத் திலும் தடுக்க முடியாத வீர்யமுடைய ம்ருத்யு நேரு வதை அறிகிறதில்லை. (ஆகையால் அவர்கள் நிந்திக்

கத் தக்கவர்களே.) யஜ்ஞத்தில் மத்யபானமும் பசுமாம்ஸபக்ஷணமும் ப்ராணனைச் சரீரமாகவுடைய பரமாத்மாவுக்குப் பக்ஷணமாக விதிக்கப்பட்டவை. இங்ஙனமே ஸ்த்ரீகளைப் புணர்வதும் ஸந்ததிக்காகவேயன்றிக் கேவலஸம்போகத்திற்காக வன்று. இந்த அபிஸந்தியோடு நடத்துவார்களாயின் மத்யபானம் மாம்ஸபக்ஷணம் ஸ்த்ரீஸம்போகம் ஆகிய இவை நிந்தைக்கிடமாகமாட்டா; பரிசுத்தங்களேயாம். இப்படியாயின் பசுவை வதிப்பது ஹிம்ஸையாகாது; பின்னையோவென்றால், பசுசரீரம் பெற்ற ஜீவாத்மாவின் உஜ்ஜீவனத்தின் பொருட்டேயாம். இங்ஙனம் பரிசுத்தமான தங்கள் வர்ணாச்ரம தர்மங்களின் மர்மத்தை மூடர்கள் அறியாமல் போகத்திற்காகவே பசுஹிம்ஸாதிகளை நடத்துகிறார்கள். இங்ஙனம் ஏற்பட்டிருக்கிற தர்மஸூக்ஷ்மத்தை அறியாத அஸத்துக்கள் வணக்கமின்றித் தங்களைத் தாங்களே ஸத்துக்களாக அபிமானித்துக் கொண்டு 'நமக்கு என்ன வருமோ' என்கிற சங்கையில்லாமை மாத்ரமன்றியே 'நமக்கு ஒரு கெடுதியும் இல்லை' என்று பெரிய நம்பிக்கையுமுடையவர்களாகிப் பசுக்களுக்கு த்ரோஹஞ் செய்கிறார்கள். அந்தப் பசுக்கள் பரலோகஞ் சென்று தங்களுக்கு த்ரோஹஞ் செய்த அப்புருஷர்கள் அவ்விடம் வர, அவர்களைப் பக்ஷிக்கின்றன. மற்றும், அம்மூடர்கள் பிறருடைய தேஹங்களில் த்வேஷங்கொண்டு அபிசாரம் முதலிய கொடிய செயல்களைச் செய்கிறார்கள். அந்த த்வேஷம் தங்களுக்கும் பிறர்க்கும் அந்தராத்மாவாயிருப்பவனும் நியாமகனும் துக்கங்களைப் போக்குந்தன்மையனுமாகிய பரம புருஷனிடத்திலேயே போய் முடிகிறதாகையால், அவர்கள் அவனையே த்வேஷித்தவராவார்கள். மற்

னும், அவர்கள் பிள்ளை பெண்டிர் முதலிய அனுபந்தங்
களோடு கூடியதும் பிணம்போன்றதுமாகிய தேஹத்
தில் ஸ்நேஹம் வேரூன்றப் பெற்றுக் கடைசியில் நரகத்
தில் விழுகிறார்கள். இவர்கள் ஜ்ஞானநிஷ்டையையும்
அடைந்தவர்களல்லர்; கேவல மூடத்தனத்திலும்
சேர்ந்தவர்களல்லர்; தர்ம அர்த்த காமங்களையே ப்ர
தானமாகக் கொண்டவர்கள்; ஒரு க்ஷணமாயினும்
வ்யாபார மில்லாமல் ஓய்ந்திருக்குந் தன்மையரல்லர்;
தேஹாதிகளை நிலைநின்றிருப்பவைகளென்று நினைத்து
அவற்றின் க்ஷேமத்திற்காகவே ஓயாமல் கார்யஞ்
செய்து கொண்டிருப்பார்கள். ஒன்றுந்தெரியாத மூடர்
கள் தத்வஜ்ஞர்களுடைய அனுக்ரஹத்தினாலும் உப
தேசாதிகளாலும் கரையேறுவார்கள். ஜ்ஞான நிஷ்
டர்களோவென்றால் தாங்களே கரையேறுகிறார்கள்.
இரண்டிலுஞ் சேராத இம்மூடர்களோ வென்றால், தாங்
களாகவும் கரையேற வழியில்லை; பிறரை யடுத்தும்
கரையேற மாட்டார்கள். பின்னையோ வென்றால், தங்
களை ஒன்றுக்கும் வழங்காதபடி பாழாக்கி விடுவார்கள்.
(கடைசியில் ஸ்தாவர ஜன்மத்தையே பெறுவார்கள்).
ஆத்மகாதகர்களான இம்மூடர்கள் பசி தாஹம் முத
லியவைகளால் பீடிக்கப்பட்டுத் தாங்கள் அஜ்ஞானிக
ளாயிருந்தும் தங்களை ஜ்ஞானிகளாகப் பாவித்துக்கொ
ண்டு சிலகாலம் செல்லுகையில் தங்கள் மனோரதங்க
ளெல்லாம் பாழாகப் பெற்றுச் செய்யவேண்டிய கார்யத்
தைச் செய்யாமல் ஜீவதசையிலேயே வருத்தப் படுவார்
கள். மற்றும், அவர்கள் தாங்கள் மிகவும் ப்ரயாஸப்
பட்டு ஸம்பாதித்த வீடு வாசல் பிள்ளை நண்பர் பெண்டிர்
முதலியபரிக்ரஹங்களை யெல்லாம் துறந்து வாஸுதேவ
பராங்முகர்களாகையால் (ஸர்வாந்தராத்மாவான பரம

புருஷனிடத்தில் மனஞ்சொல்லப் பெறுதவராகையால்) நரகத்திற்குப் போகவேண்டுமென்னும் விருப்பமற்றவராயினும் நரகத்தை அடைகின்றார்கள். வாஸுதேவ பக்தர்களோவென்றால், அங்ஙனம் நரகத்தை அடையமாட்டார்கள்; அவ்வாஸுதேவனுடைய வாஸஸ்தானமான பரமபதத்தையே அடைவார்கள். அவர்கள் என்றும் மீண்டு ஸம்ஸாரத்தை அடையமாட்டார்கள்.

மன்னவன் சொல்லுகிறான்:—அப்பகவான் எக்காலத்தில் எந்த நிறமுடையவனாயிருப்பான்? எத்தகைய ஆகாரமுடையவனாயிருப்பான்? எந்த நாமத்தைச் சொல்லி எந்த விதியின்படி அவனைப் பூஜிக்கவேண்டும்? இதையெல்லாம் எங்களுக்குச் சொல்வீர்களாக.

க்ரமிலன் சொல்லுகிறான்:—அப்பகவான் க்ருதயுகம் த்ரேதாயுகம் த்வாபரயுகம் கலியுகம் என்கிற நான்கு யுகங்களிலும் பலவகை நிறங்களும் பலவகை நாமங்களும் பலவகை ஆகாரங்களுமுடையவனாகிப் பலவகைகளால் பூஜிக்கப்படுவான். க்ருதயுகத்தில் வெளுப்புநிறமும் நான்கு புஜங்களும் உடையவனாகி ஜடைகள் தரித்து க்ருஷ்ணாஜினத்தினால் யஜ்ஞோபவீதம் அணிந்து அக்ஷமாலை தண்டம் கமண்டலு இவைகளை ஏந்திக்கொண்டு ப்ரஹ்மசாரிவேஷத்துடன் விளங்குவான். அந்த க்ருதயுகத்தில் பகவானை ஆராதிக்கிற மனுஷ்யர்கள் சாந்தர்களாயிருப்பார்கள். அவர்களுக்கு எவரிடத்திலும் வைரம் உண்டாகாது. அவர்கள் ஸமஸ்த பூதங்களுக்கும் நண்பர்களாயிருப்பார்கள்; எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பார்கள்; வெளியிந்த்ரியங்களையும் உள்ளிந்த்ரியமான மனத்தையும் அடக்

கிக்கொண்டு த்யானயோகத்தினால் பகவானை ஆராதிப்பார்கள். பரிசுத்தனாகையால் ஹம்ஸனென்றும், அழகிய நிறமுடையவனாகையால் ஸுவர்ணனென்றும், தர்மநிர்வாஹகனாகையால் தர்மனென்றும், யோகநிர்வாஹகனாகையால் யோகேஸ்வரனென்றும், ஹேய குணங்கள் தீண்டப் பெறாதவனாகையால் அமலனென்றும், ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களால் அறிய முடியாதவனாகையால் அவ்யக்தனென்றும், மூன்று லோகங்களிலும் உள்ளே புகுந்து நியமித்துத் தரித்துக்கொண்டிருப்பவனாகையால் பரமாத்மாவென்றும், அப்பொழுது பகவானைப் பாடுவார்கள். இப்பகவான் த்ரேதாயுகத்தில் சிவப்பு நிறமும் நான்கு புஜங்களும் உடையவனாகி முப்புரி மேகலை அணிந்து பொன்னிறமுள்ள கேசங்கள் அமைந்து மூன்று வேதங்களைச் சரீரமாகவுடையவனும் வேதங்களால் நிரூபிக்கப்படுகிற யஜ்ஞங்களுக்கு நிர்வாஹகனும் அந்த யஜ்ஞங்களை மூர்த்தியாகவுடையவனும் ஸ்ருக்கு ஸ்ருவம் முதலியவற்றை அடையாளங்களாகவுடையவனுமாயிருப்பான். தர்மிஷ்டர்களும் ப்ரஹ்மவாதிகளுமான அப்பொழுதுள்ள ஜனங்கள் ஸமஸ்த தேவதைகளையும் சரீரமாகவுடையவனாகையால் ஸமஸ்த தேவதாஸ்வரூபனும் தன்னைப்பற்றினவர்களின் வருத்தங்களைப் போக்குந்தன்மையனுமாகிய அப்பகவானை வேதங்களில் சொல்லப்பட்ட கர்மத்தினால் ஆராதிப்பார்கள். எங்கும் நிறைந்திருப்பவனாகையால் விஷ்ணுவென்றும், யஜ்ஞங்களுக்கு நிர்வாஹகனாகையால் யஜ்ஞனென்றும், ப்ருஸ்னியின் புதல்வனாக அவதரிக்கையால் ப்ருஸ்னிகர்ப்பனென்றும், ஸமஸ்த தேவதாஸ்வரூபனாகையால் ஸர்வதேவனென்றும், மூன்றடிகளில் உலகங்களையெல்லாம் அளக்கவல்ல பெரிய அடிகளையுடையவனாகையால்

உருக்ரமனென்றும், விருப்பங்களைப் பெய்கின்றவனும் வருத்தங்களைப் போக்குகின்றவனுமாகையால் வ்ருஷாகபி யென்றும், எப்பொழுதும் எல்லாரிலும் மேன்மையுற்று விளங்குந் தன்மையனாகையால் ஜயந்தனென்றும், பெரும்புகழுடையவனாகையாலும் பலவாறு பாடப்படுகின்றவனாகையாலும் உருகாயனென்றும் அப்பொழுது பகவானைத் துதிப்பார்கள். த்வாபரயுகத்தில் பகவான் பீதாம்பரம் உடுத்துத் தனக்கு அஸாதாரணமான ஸுதர்சன சக்ரம் முதலிய ஆயுதங்களைத் தரித்து ஸ்ரீவத்ஸமென்னும் திருமறுவு முதலிய அடையாளங்களோடும் கௌஸ்துபம் முதலிய மற்றும் பல அடையாளங்களோடுங்கூடி விளக்கமுற்றிருப்பான். மன்னவனே! அப்பொழுதுள்ளவர்கள் சித்து அசித்து ஈச்வரன் என்னும் மூன்று தத்வங்களின் உண்மையை அறிய விரும்பிக் குடை சாமரம் முதலிய மஹாராஜலக்ஷணங்கள் அமைந்த அப்பரமபுருஷனை வேதத்திலும் பாஞ்சராத்ரத்திலும் சொல்லப்பட்ட விதியின்படி ஆராதிப்பார்கள் அந்த த்வாபரயுகத்தில் ஜனங்கள் 'எங்கும் நிறைந்திருப்பவனும் எல்லாவற்றையும் தன்னிடத்தில் ஏற்றுக்கொண்டிருப்பவனும் அவற்றின் விகாரங்கள் எவையும் தீண்டப் பெறாமல் விளங்குந் தன்மையனுமாகையால் வாஸுதேவனென்றும் பெயர் பூண்ட உனக்கு நமஸ்காரம். ஸம்ஸாரத்தினின்று ஆத்மாக்களை இழுத்துக் கரையேற்றுகையால் ஸங்கர்ஷணனென்றும்பெயர் பூண்ட உனக்கு நமஸ்காரம். ப்ரத்யும்னனென்றும் அநிருத்தனென்றும் அவதாரங்கள் செய்த மஹானுபாவனும் ஷாட்குண்யபூர்ணனாகையால் பகவானென்னும் பெயர்பெற்றவனுமாகிய உனக்கு நமஸ்காரம். ஸமஸ்த வஸ்துக்களுக்கும் தான் ஆதாரமாயிருப்பவனும் ஸம

ஸ்த வஸ்துக்களையும் தனக்கு ஆதாரமாகக் கொண்ட வனுமாகையால் நாராயணனென்னும் நாமமுடைய உனக்கு நமஸ்காரம். இந்த்ரியங்களுக்கு எட்டாத விஷயங்களை அறியுந்தன்மையனாகையால் ரிஷியென்றும், தன்னைப்பற்றினவர்களுக்கு அமிதமாகக் கொடுப்பவனாகையால் புருஷனென்றும், தன்னைப்பற்றினவர்களோடு புரையறக் கலந்து அவர்களை நித்யஸூரிகளுக்கும் பிராட்டிக்கும் மேலாக நினைத்துப் பரிமாறுந் தன்மையனாகையால் மஹாத்மனென்றும், ஸமஸ்த ப்ரபஞ்சங்களுக்கும் நியாமகனாகையால் விஸ்வேஸ்வரனென்றும், அந்த ப்ரபஞ்சங்களை யெல்லாம் சரீரமாகக்கொண்டு அவையெல்லாம் தானேயென்னும்படி யிருக்கின்றமையால் விஸ்வனென்றும் ஸமஸ்தபூதங்களுக்கும் அந்தராத்மாவாயிருக்கையால் ஸர்வபூதாத்மனென்றும் கூறப்படுகிற உனக்கு நமஸ்காரம். மன்னவனே! இங்ஙனம், வாஸுதேவன் ஸங்கர்ஷணன் ப்ரத்யும்னன் அநிருத்தன் பகவான் நாராயணன் ரிஷி புருஷன் மஹாத்மன் விஸ்வேஸ்வரன் விஸ்வன் ஸர்வபூதாத்மன் என்னும் நாமங்களைச் சொல்லி த்வாபரயுகத்தில் ஜனங்கள் ஜகதீஸ்வரனை ஆராதிப்பார்கள். கலியுகத்திலும் பலவகைத் தந்த்ரங்களில் சொல்லியவிதியின்படி ஜனங்கள் பகவானை ஆராதிக்கிறார்கள். அதைச் சொல்லுகிறேன், கேட்பாயாக. விவேகமுடைய ஜனங்கள் கறுப்புநிறமுடையவனும் இந்த்ர நீலமணிபோல் மிகுந்த ஒளியுடன் திகழ்கின்ற அங்கங்களோடும் உபாங்கங்களோடும் ஸுதர்சனாதி அஸ்த்ரங்களோடும் ஸுநந்த நந்தாதி பரிவாரங்களோடும் கூடி விளக்கமுற்றவனுமாகிய ஸ்ரீக்ருஷ்ணபகவானை நாமஸங்கீர்த்தனங்கள் நிறைந்த அர்ச்சனரூப யஜ்ஞங்களால் ஆராதிக்கிறார்கள். 'தன்னை வணங்கினவர்